என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

October 2014

FREE ISSUE

# லண்டன் தமிழர் தகவல்

London Tamil's Information

**திருச்செந்தூர்**
**கந்த சஷ்டி**
**விரதம்**
**அக்டோபர்**
**24-29**



மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


லண்டனில் No1
நகை மாளிகை
Lakshmis Jewellers
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை


Niru BRAND®
Bringing
Great
Food
to Life.
The No 1 Brand
Niru BRAND
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk



# தமிழர் தகவல்
## Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்


திருவள்ளுவர் ஆண்டு 2045
நந்தன - புரட்டாசி
மலர் : 13
இதழ் : 137
அக்டோபர் - 2014

முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ்அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே




4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!


தரமான தயாரிப்புகளையே
வாங்குங்கள்
என்றும் தரமானவை
நிரு
தயாரிப்புகள்

தங்கம் என்று நினைத்ததும்
நினைவுக்கு வர வேண்டிய பெயர்
Tharani Jewellery
54 Ealing Road, Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 8902 6777

வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!

# 50ஆவது நினைவு ஆண்டு



சரவணையை பிறப்பிடமாகவும்
கரம்பனை வாழ்விடமாகவும் வாழ்ந்த

# இளையதம்பி நாகராசா

அவர்கள் 50வது நினைவு ஆண்டு

மகள் **இராஜேஸ்வரி நீக்கிளஸ்**
மகன் **சிவானந்தஜோதி பத்மினி**

LycaFly
Travel the world for less

24x7
Call us now 0207 132 32 32
or visit www.Lycafly.com

THE MOST POPULAR AGENT OF SRILANKANS



£50 Free
Lycamobile top-up
with every single return ticket to
Colombo



T&C apply

SriLankan Airlines
Non stop flights to Colombo
fr £205 + taxes

Best deals of the week

| | | |
|---|---|---|
| New York | fr | £439 |
| Chennai | fr | £441 |
| Dubai | fr | £298 |
| Singapore | fr | £488 |
| Bangkok | fr | £457 |
| Toronto | fr | £444 |
| Melbourne | fr | £670 |

Incl Taxes

OMAN AIR
QATAR AIRWAYS
BRITISH AIRWAYS

We work with over 160 airlines

WEMBLEY
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055


EAST HAM
180 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056

TOOTING
232 Upper Tooting Road,
London SW17 7EW · 0207 132 0057

MILTON KEYNES
16 Stratford Road MK12 5LJ
0207 993 6355 / 0190 822 7562

IATA


# நான் பெற்ற பேறு!



எம்பெருமான் சிவனின் அருளையையும், கருணையையும் என் வாழ்வின் பல்வேறு தருணங்களில் நான் உணர்ந்து வந்திருக்கிறேன். அப்படிப்பட்டதோர் ஆசீர்வாதத்தை இந்த முறை (செப்டம்பர் 2014) தமிழ்நாட்டிற்குப் போயிருந்தபோது மீண்டும் ஒருமுறை உணரும் பாக்கியம் பெற்றேன்.

செப். 21ஆம் தேதி, பேரூர் ஆதீன கர்த்தரைக் காணச் சென்றேன். அன்று அவருடைய 90ஆவது பிறந்தநாள். ஆதீன மடத்தின் சார்பாகவும், அன்பர்கள் சார்பாகவும் பேரூர் ஆதீனத்தின் பிறந்தநாள் விழா சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆதீனம் அவர்கள், அவருடைய பிறந்த நாளை முன்னிட்டு, அனைவருக்கும் ஆசி வழங்கிக் கொண்டிருந்தார். அன்பர்களில் ஒருவனாக நானும் அங்கே இருந்தேன். அப்போது பேரூர் ஆதீனம் தன் திருவாய் மலர்ந்து, 'இங்கே லண்டன் சிவானந்த சோதி வந்திருக்கிறார். சைவம் வளர்ப்பதிலும், தமிழை நேசிப்பதிலும் வைராக்கிய மனதுடையவர்' என்று சொன்னார். மேலும் என்னைப் பாராட்டி சிறு பரிசும் வழங்கி ஆசீர்வதித்தார். அவருடைய 80ஆவது பிறந்தநாளின் போது, 'சிவம் பரப்பும் சீலர்' என்ற பட்டத்தை எனக்களித்துச் சிறப்பித்த பெருமகன் அவர் என்பதையும் இங்கே மகிழ்வோடு குறிப்பிட விரும்புகிறேன்.

பத்தாண்டுகள் கழித்து, அப்படிப்பட்ட பாக்கியத்திற்கு நான் உள்ளாகி இருக்கிறேன் என்பதை நினைக்கும்போது, மிகவும் பெருமிதமாக இருக்கிறது. இதை என் வாழ்நாளில் நான் பெற்ற பெரும் பேறாகக் கருதுகிறேன்.


மீண்டும்
புதுபொலிவுடன்
MITHUS
MITHUS
Jewellers
322-324 London Road
Croydon CR0 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792


DOSA
LOUNGE
A Taste of Pure Spice Heaven
SRI LANKAN & SOUTH INDIAN
RESTAURANT AND TAKE AWAY
ALL VEGETARIAN FOODS ARE
COOKED SEPARATELY IN OUR
VEGETARIAN KITCHEN
AND SERVED ON SEPARATE PLATES
PARTY/ FUNCTION HALL
AVAILABLE FOR HIRE.
SMALL HALL UP TO 35 SEATS,
BIG HALL UP TO 120 SEATS
FREE
DELIVERY
(6PM TO 10PM)
WITHIN 3 MILES RADIUS,
MINIMUM ORDER OF
£20.00
OUTDOOR CATERING FOR PARTIES,
FUNCTIONS ETC AVAILABLE
OPENING TIMES
MONDAY – SUNDAY
11AM – 11PM
திங்கள் அன்று விடுமுறை
Tel: 020 8684 6661
5-7 St.James's Road, West Croydon, CR0 2SB
www.dosalounge.co.uk



Rathy Jewellers Ltd
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்
The Leading Jewellery Store
in London with the Largest
Selection including
Diamond Jewellery,
Thaali Kodi and all
Studded Jewellery
Opening Hours
Mon-Sat 10 am
to 6.30 pm
Sun 12 Noon
to 6.30 pm
WEMBLEY BRANCH
28 Ealing Road, Wembley
Middlesex HA0 4TL, 020 8903 3063
TOOTING BRANCH
209 Upper Tooting Road
Tooting SW 17 7TG, 020 8682 2233
எங்களிடம் வரும் பழைய நகைகள் புதுப்பிக்கப்பட்ட
பின்னர் தான் மீளத் தயாரிக்கப்படுகிறது அதனால்
எல்லா நகைகளுக்கும் 22கரட் சரியாக இருக்கும்

**Tamil Performing Arts Society**

**presents**

# Tamil Drama Festival 2014

2 new plays directed by K Balendra



## Samooha Virothi

Ibsen's 'An Enemy of the People'
A powerful drama about principles and politics clashes
in the pursuit of truth.
Brother against brother. Neighbour against neighbour.
Transcreation - Prof. S Sivasegaram

## Arasanin Puthaadai

by the students of the London Tamil Drama School in
celebration of its 10th anniversary
Script by Maavai Nithiyananthan

**Sunday 5th October 2014**
**at 5.30pm (Doors open at 5pm)**

**Pump House Theatre**
Local Board Road, Lower Watford High Street,
Watford, WD17 2JP

For details: 02084222859
www.pumphouse.info

# Chennai Spice

Restaurant & Banqueting Suite

213-217, Hertford Road, Edmonton, N9 7ER



## Free Banqueting Hall

- Monday - Thursday - Except Bank Holidays
- Large Modern Banqueting Hall for Wedding, Wedding Reception, Birthday Party, and all other events.
- Unlimited Maincourse food & Drinks for the Party at reasonable price



## Restaurant

- Open 7 days a week
- Live Music on Every Fridays
- Live Sports in Big Screen
- New Menu with Appam, Kulal Puttu and Traditional Dishes
- Free Home Delivery upto 3 miles



## Catering

- Catering for Arangetrams, Birthday Parties, Wedding, Wedding Reception and all other functions
- On site Catering available on request



## Event management

- Excellent Management of your functions
- Different varities of food (Sri Lankan, South Indian/North Indian and Chinese)
- Varities of service (Table service, Buffet style, Banana Leaf service etc)
- Decoration & DJ

# சைவமே முதல் சமயம்
# சிவனே முதற்கடவுள்!



"வானாகி மண்ணாகி
வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி
உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென்
றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்ற"

எம்பெருமான் இறையனாரை முதற் கடவுளாகக் கொண்டதே சைவ சமயம். பிறைசூடிய பெருமானும், ஆறுமுகக் கடவுளுமே சைவத்தின் ஆதார சுருதிகள். அவர்களை மையமாகக் கொண்டே, அறுபத்து மூவரும் சைவத்தைப் பேசினர். சமயக் குரவர்கள் நால்வரும் சிவனையும் முருகனையும் போற்றியே திருமுறைகளைப் பாடியருளினர். எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழ் மரபோடு, தமிழ் மண்ணில் பிறந்து வளர்ந்து கோலோச்சிய மதம் சைவமே!


ஈழத்தமிழ் மக்களை உலமறியச் செய்தது ஈழவிடுதலைப் போராட்டம் என்றால், அவர்களுக்கு உலகை அறியச் செய்தது சைவம் என்றே சொல்வேன். ஈழத்தமிழர்கள் சைவத் தமிழ் மரபினர். அவர்களுக்குத் தமிழும் சைவமும் இரண்டு கண்கள். ஆனால் அண்மைக் காலமாக இரண்டிலும் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஒரு தேக்க நிலை, சுணக்கம் ஏற்பட்டுள்ளதைப் பார்க்க முடிகிறது.

லண்டனிலுள்ள சைவக் கோயில்கள் முழுமையான சைவ ஆலயங்களாக இல்லை. அக்கோயில்களில் உற்சவரை விட, அம்மன், பிள்ளையார் போன்ற தெய்வங்களுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆகமப்படி குறிப்பிடப்பட்ட நாள்களில் நடத்தப்பட வேண்டிய திருவிழாக்கள், தேரோட்டங்கள் எல்லாம் அவரவர்க்கு வசதிப்பட்ட நாள்களில், நேரத்தில் நடத்தப்படுகின்றன. திருமுறைகளைப் படிப்பதில் இன்றுள்ள இளைய தலைமுறையினர் ஆர்வம் காட்டுவதில்லை. திருமுறைகளே அவர்கள் சைவர்கள் என்பதற்கான அடையாளத்தைத் தரவல்லவை. இன அடையாளத்தையும், சமய அடையாளத்தையும் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய, மீட்டுருவாக்கம் செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதை வேதனையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

சைவர்களான நமக்குரிய முதற் கோயில்கள், ஈழத்தில் இரண்டும், தமிழ்நாட்டில் 272 கோயில்களுமான, பாடல் பெற்ற 274 திருத்தலங்கள் மட்டுமே. அதற்குத்தான் நாம் முக்கியத்துவம் தர வேண்டும். அதேபோன்று ஒவ்வொரு தலத்திற்கும் சிறப்பான நாள்கள், திருவிழாக்கள் என இருக்கின்றன. அவற்றை உரிய முறைகளோடு செய்விக்க வேண்டும். சைவக் கோயில்களில் சைவ சமயத் திருவிழாக்கள் மட்டும்தான் நடைபெற வேண்டும். இன்று பல கோயில்களில், வைணவக்கோயில்களில் நடைபெறுவதைப் போன்று மலையப்ப சாமி, பூதேவி, சீதேவி ஆகியோரோடு உலா வருகின்ற நிகழ்வுகளை சைவக் கோயில்களிலும் செய்வதைப் பார்க்க முடிகிறது. சிவா - விஷ்ணு ஆலயங்கள் என அதற்கென்று உள்ள கோயில்களில் இப்படிச் செய்வதை நாம் எதுவும் கேட்கப் போவதில்லை. இதை புலம்பெயர்ந்த தமிழர்கள் உணரவேண்டும்.

"உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்"

என்னும் திருமுருகாற்றுப்படையின் நக்கீரன் வரிகள் நம் உறவுகளை நல்வழியில் ஆற்றுப்படுத்தட்டும் என்று வேண்டுகிறோம்.





# ஈரம் காயாத ஈழத்தமிழின் வாடை

## பாலுமகேந்திரா மனைவி கருத்து

பாலுமகேந்திரா மறைவுக்கு பிறகு ப்ளே ஸ்கூலாகிவிட்டது அவரது வீடு. அவரது மனைவி அகிலா அம்மா அபார்ட்மெண்டுக்கு குடிபெயர்ந்துவிட்டார். பழங்காலத்து கட்டிடம் போல காட்சி தந்த இந்திரா நகர் வீட்டை பங்களா மாதிரி பளபளக்க வைத்திருக்கிறார் பாலுமகேந்திராவின் மகன் ஷங்கி. தட்டுமுட்டு சாமான்கள் இடம் மாறுவதற்கு நாம் போய் நின்றோம்.

“உங்களுக்குத் தெரியும்; நான் அவர் மறைஞ்ச பொழுதும்கூட பேட்டியொன்றும் கொடுக்கயில்ல. நிறைய பேச சொல்லி கேட்டாங்க. நானொரு சாதாரணமான குடும்ப பெண்ணா வீட்டுக்குள்ளேயே இருந்தவள். எனக்கு ஊர் உலகம் ஒண்டும் தெரியல்ல. நான் பேசுற முதல் பேட்டி இது. நீங்க கவனமா எழுதணும் சரியோ?” ஈரம் காயாத ஈழத்தமிழின் வாடை அப்படியே நம் அடிமனசில் வந்து அண்டுகிறது அகிலா அம்மாவின் வார்த்தையில்.

“நான் பொறந்து வளர்ந்தது முழுக்க மட்டகௌப்பு. அவருக்கு யாழ்ப்பாணம். அங்கேதான் காலேஜ் படிச்சுட்டு ஆர்க்கிடெக் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு பொட்டோகிராஃபியில கொள்ளை ப்ரியம். அந்த உதியோகத்தை ரிசைன் பண்ணிட்டு புனே இன்ஸ்டியூடுக்கு டைரக்ஷன் கேமிரா படிக்க வேண்டி எழுதி போட்டார். அவர போல நிறைய ஆட்கள் இலங்கையில இருந்து எழுதி போட்டாங்க. யாருக்கும்

ஒண்டும் கிடைக்கல. என் கனவருக்கு மட்டும்தான் கிடைச்சது. சின்ன பிள்ளையா இருக்கயிலே அவர் பர்த் டேவுக்கு காமிரா ஒன்டு பரிசாக வாங்கிக் கொடுத்திருக்கிறார் என்னட மாமனார். அந்த காமிராவை வச்சு படமெடுத்து படமெடுத்து பழகி கொண்டார் எண்டு பொறவு அவர் விளிச்சது ஞாபகம்" என்று அகிலா அம்மா பேசிக் கொண்டுக்கும்போதே காலை வந்து தழுவுகிறது காமிரா கலைஞன் வளர்த்த செல்லப்பிராணி சுப்ரமணி.

"சாருக்கு செடிக்கொடி, மிருகங்கள் எண்டா ரொம்ப பிடிக்கும். முதல்ல வளர்த்த நாயொண்டு ம்ம்.... பெயர், சுப்ரமணி. அதான் 'மூன்றாம்பிறை'யில நடிச்சிருந்தது. பொறவு சில்கி எண்டு ஒரு நாய் வளர்த்தார். 'வீடு' படத்தப்ப இருந்தது..? ம்ம்ம்ம்.... மூன்றாது இருந்தது, பீட்டர்.. அப்புறாம் வள்ளி. இப்ப திரும்ப சுப்ரமணி. மொத்தம் அஞ்சு நாய்கள் வளர்த்தார். அவர் போன பொறவு இவந்தான் எண்ட கூடவே கணப்பொழுது தங்கிக்கிடக்கான். மகனும் மருமகளும் பேரனும் அடையாரில் இருக்காங்க." என்றவரிடம் இந்திரா நகர் வீட்டை ஏன் காலி செய்துக் கொண்டு வந்துவிட்டீர்கள் என்றோம். மீண்டும் தொடர்ந்தார்.

"ம்ம்ம்.. நெதமும் அவர் நினைப்பாவே இருக்கு. அவர் நிண்ட இடம். உட்கார்ந்த இடம். அவர் ஓயாமல் வளர்த்த செடிக்கொடிகள் எண்டு நிறைய ஞாபங்கள் மனசை சங்கடப்படுத்துவது மனித இயல்புதானே? முதல் நாள் அவரோட பட்டறையில இருந்து வந்தவர் மறுநாள் காலை நாலு மணியாகியும் விழிக்கயில்ல. ஷூட் இருந்தா எப்பவும் மூனரைக்கு எழுந்திடுவார். ஒரு நாளும் அவர் நாலு மணிக்கு மேல் தூங்கியதில்ல. அன்றைக்கு இன்னும் விழிக்கயில்லயே என போய் தட்டி எழுப்பினென். அவர் மூச்சு, பேச்சற்றுக் கிடந்தார். விழிக்கயில்ல. உடனே ஹாஸ்பிட்டலுக்கு கொண்டு போனோம். வீட்டுலயே மூச்சு பிரிந்துவிட்டதாக டொக்டர் சொன்னார். இரவு உறங்கப் போவதற்கு முன்னே பூனைக்கு பால் வச்சுட்டுப்போய் படுத்தார். அவர் திரும்ப எழவே இல்ல. அந்தப் பூனை அவர் செத்தது தெரியாமல் இப்பவும் வந்து வந்துப் போகுது. இதெல்லாம் நம்ம மனசை அழுத்தும் தானே?! அதான் வீட்டை காலி செய்துகொண்டு புறப்பட்டுட்டேன்?" என வார்த்தைக்கூட வலிக்காமல் யோசித்து யோசித்துப் பேசுகிறார் அகிலா அம்மா.

"அவர் ஒரு குடும்ப தலைவரா வீட்டுக்கு செய்ய வேண்டிய கடைகள் சகலத்தையும் செஞ்சு கொடுத்தார். 72ல கல்யாணம் கழிச்சுக் கொண்டு வந்த நாள் முதல் ஒரு குறையும் எனக்கு வைக்கல்ல. எங்கே போனாலும் அகிலா.. அகிலா எண்டுதான் உயர்த்திப் பேசுவார். எங்கேயும் என்ன விட்டுக் கொடுக்க மாட்டார். அவர் எதயும் என்னிடம் மறைச்சது கிடையாது. வெளிப்படையா வாழ்ந்தார். அவர்கிட்ட ரகசியம் எண்டு ஒன்றுமேயில்ல. அந்த அன்புதான் நான் விரும்பினது." என எமோஷன் ஆகிறார். சமீபத்தில் 'தலைமுறைக்கு' ஃபிலிம்ஃபேர் அவார்ட் கமல் கையால் அகிலா அம்மா கொடுக்கப்பட்டிருக்கிறது.



"கமலுக்கு சின்ன வயசுல நடிச்சப்ப நேஷனல் அவார்ட்



பாலுமகேந்திரா மறைவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்புகூட 'இன்னும் மூன்று படங்கள் டைரக்ட செய்துவிட்டுதான் நான் சாவேன்' என சொல்லிக் கொண்டிருந்தாராம். அதேப்போல் அவர் இறப்பதற்கு முன் இரண்டு படத்திற்கான முழு ஸ்கிரிப்டையும் எழுதி முடித்துவிட்டே மறைந்திருக்கிறார்.

அகிலா அம்மா பதினொன்றாம் வகுப்பு வரை படித்திருக்கிறார். கவிஞர் காசி ஆனந்தன் மூலமாகதான் இரு குடும்பத்தாரும் சேர்ந்துதான் இவர்களின் திருமணத்தை முடிவு செய்திருக்கிறார்கள். கல்யாணம் முடியும் வரை பாலுமகேந்திரா திரை உலகில் பெரிய புள்ளி என்பது அகிலா அம்மாவுக்குத் தெரியாதாம். 'செம்மீன்' டைரக்டர் ராமு கார்யாட்டு எடுத்த 'நெல்லு' படத்தின் கேமிரா மூலம் திரைத்துறைக்கு சினிமாட்டோகிராபராக காலடி எடுத்து வைத்திருக்கிறார் பாலுமகேந்திரா. அந்த 'நெல்லு' படத்தின் 'ப்ரீவியூ' ஷோதான் அகிலா அம்மாவும் பாலுமகேந்திராவும் திருமணத்திற்கு பின் சேர்ந்து பார்த்த முதல் படமாம்.

கிடைச்சது. பொறவு 'மூன்றாம்பிறை'க்கு கிடைச்சது. அந்த கமல் கையால இன்னைக்கு நான் விருது வாங்கினதில் மகிழ்ச்சி எண்டு செய்தி போடுங்க.. செய்வீங்கதானே? ம்... இன்னொண்டு பாரதிராஜாவும் 'தலைமுறை'க்கு விஜய் அவார்ட் கொடுத்திருக்கிறார். அதுவும் சந்தோஷம் எண்டு போடுங்கள்" என நம்மிடம் ஒரு குழந்தையைப்போல கோரிக்கை வைக்கிறார் அகிலா அம்மா.

அவரிடம் '66ல் கல்யாணம். 71ல் குழந்தை. 72 சென்னை வாசம்.. இந்த 48 வருட வாழ்க்கையில் பாலுமகேந்திராவிடம் உங்களுக்குப் பிடித்த அம்சம் என்ன' என்றோம்.

"தப்பு செஞ்சாலும் அத மறைக்காமல் சொல்லிப் போடுவார். என்னயவிட நல்லா சமைப்பார். நான்வெஜ் சமைப்பது அவருக்கு பிடிக்கும். விருப்பமாய்க்கும் செய்வார். எனக்கு அவரே சமைச்சு பரிமாறுவார். சிக்கன், கருவாடு, மீன் இந்த மூன்றும் அவருக்குப் பிடிக்கும்." என்றவர்,

"அப்புறம் அவரோட தொப்பி, குட்டி ஹேண்ட் பேக் பிடிக்கும். ஒருமுறை தொப்பி இல்லாமல் பங்ஷனுக்கு சார் போனப்ப 'நீ பாலுமகேந்திரா என்றால் தொப்பியோடதான் வரணும்' எண்டு கே.பாலசந்தர் சொன்னதும் இப்போ ஞாபகம் இருக்கு" என்கிறார்.

"எனக்கு கிடைச்ச மருமகள் போல வராது. பேரன் ஸ்ரேயாஸுக்கு என் மேல் அவ்வளவு ப்ரியம். சார் மறைவதற்கு முன்னாடியே 'இங்கே இருந்தா என் ஞாபகமா காட்டியும் இருக்கும் எண்டு இந்த ப்ளாட் வாங்கிக் கொடுத்தார். அவர் விருப்பபடியே நான் இங்கே வந்துட்டேன்" என்றபடி சுப்ரமணியை எழுப்பி சாப்பாடு கொடுக்கிறார் அகிலா அம்மா. இறுதியாக பாலு சாருக்கு தொப்பி அடையாளம்போல அகிலா அம்மாவுக்கு என்ன அடையாளம் என்றோம்?

'பொறுமைதான் எண்டு போடுங்கள்' என்று ஒரே வார்த்தையில் முடிக்கிறார் அகிலா அம்மா.

**–கடற்கரய்**

# தொண்டுள்ளத்தைப் பாராட்டி மகிழ்கிறேன்!

1989 என்று நினைவு. சூட்டஸ்கில் ஷெல் பெட்ரோல் நிரப்பும் நிலையத்தில் நண்பர் கணேசமூர்த்தியைச் சந்தித்தேன். புத்தம் புதிய காரில் வந்து காசாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அந்த நிறுவனத்தின் மேலாளராக அருள்தாஸ் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் நான் இந்தியாவில் இருந்த எனது மனைவியையும் மகனையும் லண்டனுக்கு அழைக்கவேண்டும் என்று விரும்பினேன். எனவே, தமிழ்நாட்டில் பிரபலமான சொற்பொழிவாளராக இருக்கும் சரஸ்வதி ராமநாதனுடன் அவர்களையும் சேர்த்து அழைக்க ஏற்பாடு செய்தேன். அந்த நேரத்தில் எனக்குப் பலவகையிலும் உதவிகள் செய்து ஊக்கப்படுதியவர் திரு கணேசமூர்த்தி அவர்கள்.

அவரது இல்லத் திருமணங்களுக்குத் தவறாமல் எனக்கு அழைப்புகள் அனுப்புவார்.

பின்னர் 1993இல் ஆர்ச்வே கோவிலுக்கு சுகி சிவம் அவர்களை அழைத்தபோதும், எனக்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் அளித்தார். அந்தக் காலகட்டத்தில், லூசியம் பகுதியில் ஒரு கோவில் கட்ட வேண்டும், அப்படிக் கட்ட இயலாமல் போனால் தான் லூசியத்திலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் உறுதியாக இருந்தார். 1993ஆம் ஆண்டு ஆவணி சதுர்த்தியில் அவரது கோவில் கட்டவேண்டும் என்ற அயராத முயற்சிக்கு நல்ல பலன்கிடைத்தது என்றே சொல்ல வேண்டும். லூசியம் பகுதியில் வாழ்ந்த நடராசா சச்சிதானந்தம் அவர்களுக்கும் இதேபோன்ற எண்ணம் இருந்தது என்பதை நான் அறிவேன். ஏற்கனவே என்னிடம், கோயில் கட்ட வேண்டிய சில இடங்களையும் அவர் காட்டியிருந்தார். எனவே, ஒருமித்த எண்ணம் கொண்ட இருவரையும் இணைத்துக் கோவில் பணியை மேற்கொள்ள வைத்தேன். எந்தச் சூழலிலும் நான் அந்த நிர்வாகத்தில் பங்குபெற விரும்பியதில்லை. கணேசமூர்த்தியும், சச்சிதானந்தமும் இன்னும் ஏழு நபர்களும் சச்சிதானந்தம் இல்லத்தில் கூடித் திட்டமிட்டார்கள். இந்த முயற்சி பலன் கொடுத்து, மாபெரும் கோவிலாக இப்போது லூசியத்தில் காட்சியளிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கோயிலின் நீண்ட கால தொடர்சேவையில் தன்னை அர்ப்பணித்து, திறம்படச் செயல்பட்ட திரு கணேசமூர்த்தி, சிறிது ஓய்வுபெற வேண்டி, செயலாளர் பதவியில் இருந்து தற்காலிகமாக விலகிச்செல்ல முடிவெடுத்துள்ளார். இவரின் தொண்டுள்ளத்தைப் பாராட்டி, தமிழர் தகவல் இதழின் அட்டையில் நண்பரின் படத்தை வெளியிட்டு மகிழ்கிறேன்.

இருபத்தைந்து ஆண்டுகால இவரது நட்பை எக்காரணத்திற்காகவும் விலக்கிக்கொள்ள இயலாது என்பது, எங்களுடைய பண்பட்ட நட்பின் ரகசியம்!

ஆன்மிக பேச்சாளர்
**சுகி சிவம்** அவர்கள்
14வது ஆண்டாக இந்த
ஆண்டும் அக்டோபர்
24ஆம் திகதி முதல்
28ஆம் திகதி வரை
திருச்செந்தூரில்
தொடர் சொற்பொழிவு
ஆற்றவுள்ளார்.



# பெயர் சொல்லும் பெயர்த்திகள்



## மூன்றாம் தலைமுறைக்கு முதல்தலைமுறையின் மடல்

அன்பு மகளின் அருமை மகளே!


தந்தையரின் பண்புகளையும் தந்தையாய்க் கடமையாற்றும் தமையன்மாரின் தியாகங்களையும் பற்றித்தான் இந்த மடலில் எழுத நினைத்தேன். ஆனால், அண்மையில் என் மனத்தைப் பாதித்த இரண்டு நிகழ்வுகள் என் எண்ணத்தை மாற்றி விட்டன. தந்தையர் பற்றி பின்னொரு நாளில் இன்னொரு மடலில் எழுதுகிறேன்.

முகநூல் நண்பர் ஒருவர், ஒரு காணொளிக் காட்சிப் பதிவை அனுப்பியிருந்தார். விஜய் தொலைக் காட்சியில் ஒளிபரப்பான ‘சூப்பர் சிங்கர்’ என்ற நிகழ்ச்சியின் ஒரு பகுதி அது.

அந்தக் காட்சியை ஒரு முறை அன்று, பலமுறை, மீண்டும் மீண்டும் பார்த்தேன். ஒவ்வொரு முறையும் என் விழிகளில் வடிந்த கண்ணீரை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை.

‘எமக்கு எம் மண் வேண்டும்’ என்று, பல்லாயிரக் கணக்கில் உயிர்களைப் பறிகொடுத்தும், உறவுகளை உடைமைகளை இழந்தும், இன்று வரை தொடர்ந்து தம் மண்ணுரிமைக்காகப் போராடும் ஈழத் தமிழ் உறவுகளின் அவல நிலையை உணர்த்தும் காட்சியாக அது இருந்தது.

ஆதிக்க வெறியர்களின் அடக்கு முறைக்கு அஞ்சி, பல ஆயிரம் ஈழத் தமிழர்கள் பல்வேறு நாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்கிறார்கள். அப்படிப் புலம் பெயர்ந்து வாழும் ஒரு பாட்டி,



தம் தாய் மண்ணின் மீது கொண்டிருக்கும் பற்று எத்தனை வலிமையானது என்பதை உணர்த்தும் விதமாக, அவருடைய பெயர்த்தி, புலம் பெயர்ந்து வாழும் தம் பெற்றோரின் முன்னிலையில் பாடிய பாடல் காட்சிதான் அது.

விஜய் தொலைக்காட்சியின் அன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரையும் உருகவும் நெகிழவும் வைத்த நிகழ்வாக அது அமைந்தது. ஆனால், இது போன்ற நிகழ்ச்சிகளை நம் உணர்வுகளைத் தொடும் விதமாக ஒளிபரப்பும் நம் ஊடகங்கள், ஈழமக்களுக்கு நிகழ்ந்த கொடுமையையும் அநீதியையும் மக்களிடம் எடுத்துச் செல்ல கொஞ்சமும் முயற்சிக்காமல் இருந்தனவே என்ற வருத்தமும் ஆதங்கமும் என்னைப் போன்ற பலருக்கும் இருக்கின்றன.

என் மகளின் மகளே!

ஈழத்தில் எண்ணிலடங்கா உயிர்கள் பலியாகும்போது, அது தமிழர்களின் உயிர்தானே, போனால் போகட்டும் என்று இந்த உலகம் பார்க்கிறது. காஸாவில் பல ஆயிரம் மக்களின் உயிர் பறிக்கப்படும்போது அது முஸ்லிம்களின் உயிர்தானே, அதனால் நமக்கு என்ன என்றும் நினைக்கிறது இந்த உலகம். ஆனால் போகும் ஒவ்வொரு உயிரும் மனித உயிரல்லவா!. இந்த உலகமே மனித நேயம் இல்லாத உலகமாக மாறிக் கொண்டிருக்கிறதே, என்ன செய்வது?

நான் மேலே குறிப்பிட்ட அந்த நிகழ்ச்சியில் அனைவரின் உள்ளத்தையும் தொடும் விதமாகப் பாடிய அந்தப் பெயர்த்தியின் பெயர் ஜெஸிகா.

'விடைகொடு எங்கள் நாடே!' என்று தொடங்கும் அந்தப் பாடல், கன்னத்தில் முத்தமிட்டால் என்ற திரைப்படத்தில் இடம் பெற்றது. இன அழிப்புச் செய்யும் அடக்குமுறை ஆட்சிக்கு அஞ்சி, தாய் நாட்டை விட்டுப் புலம் பெயர்ந்து செல்லும் ஈழ மக்களின் அவலக் குரலாக ஒலிக்கும் பாடல் அது. அவள் பாடி முடித்ததும் கண்களில் நீர் வழிய அரங்கத்தில் உள்ள அனைவரும் பெரும் கரவொலி எழுப்பி அவளுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

ஏ. ஆர். இரகுமானின் இசையில் எம். எஸ். விசுவநாதன், மாணிக்க விநாயகம், பல்ராம்,

ரெஹானா ஆகியோரின் குரல்களில் ஒலித்த கவிஞர் வைரமுத்துவின் பாடல் வரிகள் மீண்டும் மீண்டும் என் காதுகளில் இப்போது ஜெஸிகாவின் குரலில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

'கந்தை ஆனாலும் தாய் மடி போல்
ஒரு சுகம் வருமா? வருமா?
சொர்க்கம் சென்றாலும் சொந்த ஊர் போல்
ஒரு சுதந்திரம் வருமா? வருமா?
கண் திறந்த தேசம் அங்கே
கண் மூடும் தேசம் எங்கே?
பிரிவோம் நதிகளே பிழைத்தால் வருகிறோம்
மீண்டும் தாயகம் அழைத்தால் வருகிறோம்
கண்ணீர்த் திரையில் பிறந்த மண்ணை
கடைசியாகப் பார்க்கின்றோம்
கடைசியாகப் பார்க்கின்றோம்'

அந்த நிகழ்ச்சியில் வெளிநாட்டிலிருந்து காணொளிக் காட்சியில் வந்த ஜெஸிகாவின் பாட்டிக்கு 30 பெயரக் குழந்தைகளாம். அவர்களால் தாம் பெறும் மகிழ்ச்சியை விட, தம் தாய் மண்ணுக்கு மீண்டும் செல்லும்போது கிடைக்கும் மகிழ்ச்சி பல மடங்கு அதிகமானதாக இருக்கும் என்றார் அவர்.

ஈழ மக்கள் தங்களின் விடுதலைப் போரில் வெற்றி பெறும் நாள் இன்னும் வரவில்லை என்றாலும், அந்த நாள் நிச்சம் வரும் என்ற நம்பிக்கை ஜெஸிகாவின் பாட்டிக்கு மட்டுமன்று, நமக்கும் இருக்கிறது. அந்த நம்பிக்கையைத் தரும் இன்னொரு பாடல் வரிகளையும் நான் அடிக்கடிக் கேட்பதுண்டு. 'தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா..?' என்று தொடங்கும் அந்தப் பாடலின் சில வரிகள் இவை.

உரிமை இழந்தோம் உடமையும் இழந்தோம்

உணர்வை இழக்கலாமா...?'

உணர்வைக்கொடுத்து உயிராய் வளர்த்த கனவை மறக்கலாமா...?

விடியலுக்கில்லை தூரம் விடியும் மனதில் இன்னும் ஏன் பாரம்?

உன் நெஞ்சம் முழுவதும் வீரம் இருந்தும் கண்ணில் இன்னும் ஏன் ஈரம்

யுத்தங்கள் தோன்றட்டும் ரத்தங்கள் சிந்தட்டும் பாதை மாறலாமா...?



ரத்தத்தின் வெப்பத்தில் அச்சங்கள் வேகட்டும் கொள்கை சாகலாமா...?

மண் விடுதலை வேண்டி உரிமை வேட்கையுடன் காத்திருக்கும் ஈழ மக்களின் வாழ்விலும் பாலஸ்தீன மக்களின் வாழ்விலும் விடியல் ஏற்படட்டும். அவர்கள் படும் கொடுமைகளுக்கெல்லாம் ஒரு முடிவு வரட்டும் என்றே நாம் காத்திருப்போம்.

என்னைப் பாதித்த இரண்டு நிகழ்வுகள் என்று சொன்னேன் அல்லவா? அவற்றுள் ஒன்றைப் பற்றிதான் உனக்குச் சொல்லி யிருக்கிறேன். இன்னொரு நிகழ்வு பற்றியும் சொல்லி விடுகிறேன்.

நம் தமிழர்கள் தாய்மொழிப் பற்று மிக்கவர்களாக இருக்க வேண்டும் என்ற விருப்பம் எனக்கும் உண்டு. அதே வேளையில், தேவை என்று வருகிறபோது, ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளையும் அவர்கள் நன்றாகக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதும், பிறமொழிகளைக் கற்பதற்கு விலையாகத் தாய்மொழியை மறந்து விடக்கூடாது என்பதும் நம் விருப்பம்.

எனவே, தாய்மொழித் தமிழும் அறிந்து, ஆங்கிலமும் கற்றிருந்தால் அது தமிழரின்



வளர்ச்சிக்கு வழிகாட்டும் என்பதில் அய்யமில்லை. பெரியார் தாத்தாவும் பல தமிழறிஞர்களும் இதே கருத்தையே பலமுறை கூறியுள்ளனர்.

திரவிடமொழிநூல்ஞாயிறு பாவாணர் தாத்தா சொல்வார், 'ஆங்கிலவாயிற் கல்வியால் தமிழ்ப்பற்றுக் குறையுமென்பது மட நம்பிக்கையே. பல தமிழ்த் தொண்டர் ஆங்கில வாயிற் கல்வி கற்றவரே. ஆங்கில வாயிற் கல்வி கற்றவர்க்குத் தமிழ்ப் பற்றிரா தென்பது, பெற்றோருடனன்றிப் பிறருடன் பேசுவோர்க்குப் பெற்றோர் மேற் பற்றிரா தென்று சொல்வதொத்ததே. தந்தைக்கு ஆங்கிலம் கற்கும் ஆற்றலில்லா விடினும், மகனையாவது சிறிது பெறச் செய்தல் வேண்டும். அது தலைமுறை தோறும் படிப்படியாய் வளரும்.'

ஆனால், நம்மவர் சிலர் ஆங்கிலம் படித்து விட்டுத் தமிழைத் தமிழாகப் பேசாமல் ஆங்கிலம் கலந்தே பேசுவதால் தமிழ் மொழி சிதைந்து வருகிறது என்பதைக் கருத்தில் கொண்டு, ஆங்கிலத்தில் எப்படித் தமிழைக் கலந்து பேசுவதில்லையோ, அதே போன்று தமிழிலும் பிறமொழி கலக்காமல் பேசும் பயிற்சியை நாம் பெற வேண்டும்.

மும்பையில் இந்தி, மராத்தி போன்ற மொழிகளே அதிகம் பேசப்படும் சூழலில், நம் உறவுகள், நண்பர்கள், அவர்களின் பிள்ளைகள் அனைவரும் தாய் மொழியில் உரையாடக் கேட்கும்போது நான் மகிழ்ந்து போவேன். அவர்களில் யாரேனும் ஏதேனும் விழா மேடையில் ஆங்கிலத்தில் மிகச் சிறப்பாக உரையாற்றினால் இன்னும் மகிழ்ந்து போவேன்.

அப்படி ஒரு மகிழ்ச்சி, துயரமான ஒரு நாளில், அந்தத் துயரத்தையும் மீறி எனக்கு ஏற்பட்டது. கடந்த மாதம் மறைந்த சீர்வரிசை தாத்தாவுக்கு நினைவேந்தல் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது. திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அய்யா, சென்னையில் இருந்து வந்து கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியில், பெயர்த்தி இலெமூரியாள் தாத்தாவை நினைத்து சில நிமிடங்கள் ஆங்கிலத்தில் உரையாற்றினாள். மிகப் பெரிய கூட்டத்தில், வீரமணி அய்யா உள்ளிட்ட தலைவர்கள் அமர்ந்திருந்த அந்த மேடையில், கைகளில் எந்தக் குறிப்பும் இல்லாமல் சரளமாக அவள் ஆங்கிலத்தில் உரையாற்றியதுதான் என் மகிழ்ச்சிக்குக் காரணம். ஆங்கில வழியில் படிக்கும் ஒரு கல்லூரி மாணவி மேடையில் ஆங்கிலத்தில் பேசுவதில் என்ன வியப்பு என்று சிலர் கேட்கலாம்! ஆனால், மொழி தெரிந்தவர்கள் எல்லோரும் மேடையில் முழங்கி விட முடியாது என்பதை அவர்கள் உணர வேண்டும். எனக்குத் தெரிந்து மெத்தப் படித்தவர்கள் பலர் மேடையில் தங்கள் தாய் மொழியில் பேச வரும்போதே கை கால் நடுங்குவதைப் பார்த்திருக்கிறேன். மேடையில் தமிழில் பெரும் முழக்கம் செய்யும் பல பேச்சாளர்கள்கூட, ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்றால் 'ஆளை விடுங்கள்' என்று தப்பித்து ஓடுவதையும் பார்த்திருக்கிறேன். அதனால்தான் பெயர்த்தி இலெமூரியாள் ஆங்கிலத்தில் பேசியதை நான் பெருமையாகக் கருதினேன். அவள் தன் உரையை எப்படி முடித்தாள் தெரியுமா? 'நான் வள்ளி ராஜன் – மாலினி ராஜனின் மகள் என்று சொல்லிக் கொள்வதைவிட, சண்முகராஜனின் பெயர்த்தி என்று சொல்லிக் கொள்வதில் பெருமையும் பெருமிதமும் அடைகிறேன்' என்று சொல்லி முடித்தாள். அது ஒரு இரங்கல் கூட்டம் என்பதையே மறந்து அரங்கமே கரவொலி எழுப்பி அவளை வாழ்த்தியது. இதே போன்று தமிழிலும் பெயர்த்தி இலெமூரியாள் உரையாற்ற வேண்டும் என்று தமிழ் எழுத் தாளர் மன்றத் தலைவர் வாழ்த்தினார்.

தன் பாட்டியின் பெயர் சொல்லும் ஜெஸிகாவும், தாத்தாவின் பெயர் சொல்லும் இலெமூரியாளும் அனைவரின் வாழ்த்துக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள். தாத்தா பாட்டியின் பெயர் சொல்வதால்தானே, மூன்றாம் தலைமுறையைப் பெயரன் என்றும் பெயர்த்தி என்றும் நம் தமிழ் மரபு கொண்டாடுகிறது!

உன் அன்புத் தாத்தா,

**நம்பி ஆரூர் நம்பி.**

நன்றி : தென்னரசு மாத இதழ்,
மும்பை



# கருணாநிதி தலைமையில் சென்னையில் டெசோ அமைப்பு ஆர்ப்பாட்டம்

தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் டெசோ அமைப்பு சார்பில் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பொதுச்செயலாளர் க.அன்பழகன், பொருளாளர் மு.க.ஸ்டாலின், திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன், திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன், சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கண் பார்வை அற்றவன்
## குருடன் அல்ல
## தன் குற்றங்களை உணர
## மறுப்பவனே குருடன்

**-காந்திஜி**

அக்டோபர் 2, மோகன்தாசு கரம்சந்த் காந்தி பிறந்த நாள் இந்தியாவில் காந்தி ஜெயந்தி என்று கொண்டாடப்படுகிறது.





# மனைவியிடம் பேசுங்கள்!

-திருச்சி சிவா

பன்னிரெண்டாம் வகுப்புப் படிப்பை பாதியோடு விட்டுவிட்டு, பதினேழு வயதில் என்னை மணமுடித்து, 32 ஆண்டுகள் வாழ்ந்து, 49 வயது முடியும் நேரத்தில் என்னை தனி மனிதனாக தத்தளிக்க விட்டு என் மனைவி போய் விட்டாள்.

அவளுடைய முழு ஒத்துழைப்பு, வாழ விரும்பி நடத்திய போராட்டம், மருத்துவர்களின் முயற்சி, இத்தனையும் மீறி இன்னும் வளர்ந்து நிற்கும் மருத்துவத்திற்கு கட்டுபடாத நோய் ஒன்று, எல்லோரையும் தோற்கடித்து விட்டு அவளை கொண்டு போய் விட்டது.

இதுநாள் வரை என் வாழ்வில், கடந்த காலத்தில் நான் செய்த, அல்லது செய்யத் தவறிய எதையும் எண்ணி வருந்தியதேயில்லை. காரணம் எல்லாம் தெரிந்தே, தெளிந்தே செய்ததுதான்.

ஆனால் கடந்த ஒரு வார காலமாக ஒரு குற்ற உணர்ச்சி என்னை வாட்டி வதைக்கிறது. வாழ்வின் எல்லா நிலைகளிலும், வசந்தம் எட்டிப்பார்க்காத ஆரம்ப காலத்திலும், வளம் குறைந்திருந்த நாட்களிலும் மகிழ்ச்சியோடு என்னோடு வாழ்ந்தவள் அவள்.

பொன் நகைகளை கழட்டிக் கொடுத்து விட்டு, புன்னகையோடு மட்டும் வலம் வந்த நாட்கள் உண்டு. அரசியல் வெப்பம் தகித்தபோதும், தனிமனித வாழ்வின் துன்பங்கள் சூழ்ந்தபோதும், என் அருகே ஆறுதலாய், ஆதரவாய் இருந்தவள்.

எந்த நிலையிலும் தலை தாழ்ந்து வாழ்ந்திட கூடாது என்கின்ற என் குணத்திற்கு இயைந்து, இணைந்து நடந்தவள். சுயமரியாதையை காப்பதில் என்னையும் தாண்டி நின்றவள்.

மூன்று குழந்தைகளும் பிறக்கும் நேரத்தில், இடைதேர்தல் பனி, பிரச்சாரப்பணி, போராட்டங்கள் என்று அவள் அருகே இருக்காமல் சுற்றி கொண்டுஇருந்தபொது சிறிதும் முகம் சுளிகாதவள்.

1982 செப் 15 முரசொலியில் 'என் கண்கள் உன்னை தேடுகின்றன' என்று கலைஞர் எழுதிய கடிதம் உங்களுக்காகவே என சொல்லி நிறைமாத கர்ப்பிணியாக இருந்தும் என்னை பெரியகுளம் இடைத்தேர்தலுக்கு அனுப்பிவிட்டு செப்17 குழந்தை பிறந்து,

இரண்டு நாட்கள் கடந்து 19 ந்தேதி நான் பார்க்க வந்தபோது ஒரு சிறிதும் முகம் சுழிக்காமல் ஒருமணி நேரத்திலயே என்னை மீண்டும் தேர்தல் களம் அனுப்பி வைத்த கற்பனை செய்ய முடியாத குணம் கொண்ட குலமகள். இரண்டாவது குழந்தை பிறந்து மருத்துவமனையில் இருந்து நேராக அப்போது ஒரு போராட்டத்தில் கலந்து கொண்டு போலீஸ் நிலையத்தில் காவலில் இருந்த இடத்தி பிள்ளையை காட்டி விட்டு பத்திரமாக இருங்கள் என்று சொல்லி விட்டு போன இலட்சியவாதியின் சரியான துணை.

விருந்தோம்பல், உபசரிப்பு, இன்முகம், எண்ணைக்கான வருவோர் அதனை பேருக்கும் அன்னபூரணி. இரவு இரண்டு மணிக்கு எழுந்து சுடச்சுட தோசையும், குளிர்சாதனப் பெட்டியில் வைத்த பழைய துவையலை ஒதுக்கி புதிதாக அரைத்து பசியாற்றி பின்னர் சுருண்டு உறங்கும் அன்பு தெய்வம், தாய் போன துயரம் தெரியாமல், தாயின் இடத்தையும் நிரப்பி, ஒருபொழுதும், எதன் பொருட்டும் முகம் வாடுவது பொறுக்காமல் துடிக்கும் உள்ளம் கொண்ட உத்தமி;

பொது வாழ்க்கையில் நான் நெறி பிறழாமல் நடப்பதற்குப் பெரிதும் துணையாய், ஊக்கமாய், பக்கபலமாய், இருந்தவள்.

பண்டிகைகளும், திருநால்களும், கோலாகலமாய், கூட்டம் கூட்டமாய் கொண்டாடுவதற்கு அவள்எடுத்துக் கொள்ளும் முயற்சிகளும், காட்டும் ஆர்வமும் அளவிடற்கரியவை.

இத்தனை கருத்துக்களை அவள் மீது நான் கொண்டிருந்தன ஒருநாளும் வாய்விட்டு வார்த்தையில் சொல்லியதேயில்லை. ஆண்செருக்கு என்பார்கள், நிச்சயமாக அது இல்லை. இருந்திருந்தால் இந்த உறுத்தல் வந்துருக்காது.

நேரம் இல்லை என்பார்கள், பொய் 32 ஆண்டுகளில் பத்து நிமிடம் கூடவா கிடைக்காமல் போயிருக்கும். தானாகவே புரிந்து கொள்வார்கள் என்பார்கள். என்றால் மொழி எதற்கு? மொழியின் வழியில் ஒரு பொருளுக்கு பல சொற்கள் எதற்கு? பேசுவதற்குதானே? உணர்துவதற்குதானே? ஒரு சொல் ஓராயிரம் புரியவைக்குமே.

காலம் கடந்து பயன்படுத்தினால் பயனத்துப்போவது பதார்த்தங்கள் மட்டுமா?





வார்த்தைகளும் தானே. சரியான நேரத்தில் வெளிபடுதாவிட்டால், 'மன்னிப்பு', 'நன்றி', 'காதல்' என்ற எந்த சொல்லுக்கும் உயிர் இருக்காது.விளையும் இருக்காது.

இத்தனை கற்றும் கடமை தவரியதாகவே கருதுகிறேன். ஒருநாள் ஒரே ஒரு தடவை தனியாக அவளிடம், உன்னால் தான் உயர்வு பெற்றேன் என்று கூட அல்ல, உன்னால்தான் இந்த பிரச்சனை தீர்ந்தது, உன் துணைதான் இந்த துன்பமான நேரத்தை கடக்க வைத்தது. உன் ஆலோசனைதான் என் குழப்பத்திற்கு தீர்வு தந்தது. என் வேதனையை பகிர்ந்து கொண்டு என்னை இலேசகினாய் என்று ஒருமுறையாவது கூறியிருந்தால் எவ்வளவு மகிழ்ந்திருப்பாய். கோடிரூபாய் கொட்டிகொடுத்தாலும் கிடைக்காத உற்சாகத்தை அடைந்திருபாயே.

ஊட்டிக்குப் பொதுக்கூட்டத்திற்கு சென்றிருந்த நேரத்தில் அவளின் உடல் நலம் மோசமடைததாக செய்தி கிடைத்தது வரும் வழியெல்லாம் இப்படியே யோசித்து இன்று அவளிடம் எப்படியும் உள்ளத்தை திறந்து இத்தனை நாள் சேர்த்து வைத்து இருந்ததை எல்லாம் கொட்டிவிட வேண்டும் என்று வந்து பார்த்தல் முற்றிலும் நினைவிழந்து மருத்துவமனையில் படுத்திருக்கிறாள்.

நினைவு திரும்ப வாய்ப்பேயில்லை என மருத்துவர்கள் உறுதியாக சொன்னபிறகு, மெல்ல அவள் காதருகே குனிந்து 'மும்தாஜை' ஷாஜகான் 'தாஜ்' என்று தனிமையில் அழைத்ததைபோல தேவிகாராணியை 'தேவி' என அழைத்தபோது , மூன்றாவது அழைப்பில் மருத்துவத்தை கடந்த அதிசயமாக புருவங்கள் இரண்டும் மருத்துவத்தை கடந்த அதிசயமாக புருவங்கள் 'என்ன' என்று கேட்பது போல மேல உயர்ந்து வலது விழியோரம் ஒரு துளி கண்ணீர் உருண்டோடியபோது நான் உடைந்துபோனேன்.

பேசியிருக்க வேண்டிய நாட்களில் மனதில் கொள்ளையாய் இருந்தும் பேசாமலே வீணாக்கி, உணர்வுகள் இழந்து கிடந்தவளிடம் அழுது, இன்று அவள் படத்திற்கு முன் உட்கார்ந்து கதறுகிறேன். வருகிரவரிடமெல்லாம் அவள் உயர்வுகளை

நாளெல்லாம் உணர்கிறேன். ஒரே ஒருமுறை, அவள் கம்பீரமாய் உலவிய நாட்களில் உட்கார வைத்து பேசிஇருந்தால்...

இவர் நம்மை முழுதாக புரிந்து கொண்டாரோ, இல்லையோ என்ற குழப்பத்திலேயே போய்இருப்பாளோ என்று நாளும் துடிக்கிறேன்.

எனக்கு ஆறுதல் கூறவந்த திரு.இவிகேஎஸ். இளங்கோவன், "வருதப்படதீர்கள் இதெல்லாம் அவர்களுக்கு சொல்லாமலே புரிந்திருக்கும்" என்று சமாதானப் படுத்தினார்.

நான் அவரிடம் கேட்டேன் , " நீங்களோ நானோ பொதுக்கூட்டத்தில் பேசுகிறபொழுதே, நம்முடைய பேச்சு சிறப்பாக இருந்ததோ இல்லையோ, என்பதை கூடத்தில் எழும் கரவொலி மூலம், முகக்குறிப்பின் மூலம், ஆதரவாளரின் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஆனாலும், நிகழ்ச்சி முடிந்து, காரில் ஏறியவுடன் உடன் பயனிபவர்கள் அந்த உரை குறித்து ஏதாவது சொல்லவேண்டும் என ஏன் எதிர் பார்க்கிறோம். பாராட்டினால் பரவசமடைகிறோம் . அதுபற்றி எதுவுமே பேசாமல் கூட வருபவர்கள் அமைதி காத்தால் கோபம் கொள்கிறோமே ஏன்? அது போலதான் வீட்டில் இருக்கிற பெண்களும் தங்கள் செயல்களுக்கும், சேவைகளுக்கும், பணிகளுக்கும், ஒரு வார்த்தை அன்பாக , கனிவாக, பாராட்டு சொல்லாக, கணவன் சொன்னால் மகிழ்வார்கள். இதில் நாம் இழப்பது எதுவுமே இல்லையே என சொன்னேன்.

ஏழு நாட்களுக்கு மேலாகி விட்டது, அவள் படத்தை பார்க்கிறபோதெல்லாம் நெஞ்சிலே இருந்து எதோழீ ஒன்று கிளம்பி கண்களில் நீராய் முட்டுகிறது.காலங்கடந்து நான் உணர்கிறேன்.

தோழர்களே! தயவு செய்து மனைவியிடம் பேசுங்கள். அவர்களின் துணையினை, அன்பினை, பொறுப்பினை, பொறுமையினை, பெருமையினை, வாய்விட்டு வார்த்தைகளால் சொல்லுங்கள்.

என் மனைவிக்கு என்னை உணர்தாமலே, என் உள்ளதை திறக்காமலே, பேச்சையே தொழிலாக கொண்டவன் பேசி மகிழவைகாமலேயே அனுப்பி வாய்த்த கொடுமை இனி வேறெங்கும் நிகழவேண்டாம்.. வேண்டி கேட்கிறேன்

உங்களுக்காகவே

உங்கள் பிள்ளைகளை,

உங்கள் பிரச்சனைகளை,

உங்கள் உறவுகளை, சுமந்து உங்கள் தேவைகளைப் புரிந்து தீர்த்து, எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டு, பொருள் தேடி, புகழ்தேடி நாம் வெளியே சுற்றுகிரபோதேல்லாம், காவல் தெய்வமாய் குடும்பத்தைக் காக்கும் அந்த பெண்களை புரிந்து கொண்டோம் என்பதன் அடையாளமாய், அங்கிகரமாய் நாலு வார்த்தைகள் தயவு செய்து பேசுங்கள்!

நான் சந்தித்து கேட்டவர்களில் 95 விழுக்காட்டினர் என்னைப் போலவே பேசுவதில்லை என்றே சொன்னார்கள். இது மாறட்டும்... என் மனைவியின் பிரிவு தரும் வேதனையை விட இந்த உறுத்தல் தரும் வேதனை மிக அதிகமாக இருக்கிறது. என் அனுபவம் சிலருக்காவது உதவட்டும் என்றே இதை எழுத முனைகிறேன். சில வீடுகளாவது நிம்மதியில், மகிழ்ச்சியில் நிலைக்கட்டும்.

என் வேதனை,

நான்படும் துயரம்

வேறெவர்க்கும் எதிர்காலத்தில் வேண்டாம்

அவளோடு வாழ்ந்த நாட்களின் இனிமையான தருணங்களின்

நினைவுகளே துணையாக அந்த நினைவுகளே சுமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

இதனை இப்போது சொல்லும் நான் வாழ்ந்த நாட்களில் ஒரு நாள் கூட வாய்விட்டு வார்த்தைகளில் ஒருமுறை கூட சொன்னதில்லை என்பது வெட்கப்பட வேண்டிய ஒன்று.

# லைகாவின் கத்தியும், தீர்வும்



## உலகம் முழுவதும் அதிகம் எதிர்பார்த்து காத்திருந்த படம் வெற்றிகரமாக தீபாவளியன்று தங்கு தடையின்றி வெளியீடு

விரைவில் வெளிவரவுள்ள மற்றும் மிகவும் எதிர்பார்த்து இருக்கும் கத்தி திரைப்படத்தின் தயாரிப்பாளர்களான லைக்கா புரோடக்ஷன்ஸ் செய்தியாளர்களை சந்தித்து தெளிபடுத்தி இப்படம் குறித்த பலவித வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தனர். இளைய தளபதி விஜய், சமந்தா, நீல் நிதின் முகேஷ் மற்றும் எதிர்நீச்சல் சதீஷ் நடித்துள்ள இப்படம் தீபாவளியன்று திரைக்கு வரவிருக்கின்றது. புகழ்பெற்ற ஏ ஆர் முருகதாஸ் இயக்கத்தில் ஒய் திஸ் கொலவெறி பாடல் புகழ் இசையமைப்பாளர் அனிருத் இசையமைத்துள்ளார். லைக்கா குழுமத்தின் தலைவர் திரு சுபாஸ்கரன் அல்லிராஜா, லைக்கா குழுமத்தின் உபதலைவர் திரு பிரேமானந்தன் சிவசாமி, லைக்கா மொபைல்ஸ் நிர்வாக அதிகாரியான திரு கிரிஸ் டூலி மற்றும் லைக்கா புரடக்ஷன்ஸ் தரு கே கருணாமூர்த்தி சென்னையில் நடந்த இந்த செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றினர்.



லைக்கா புரடக்ஷன்ஸ் தயாரிப்பாளரான திரு கே கருணாமூர்த்தி விழாவில் பேசுகையில் பெருமளவில் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட தலைசிறந்த தமிழ் திரைப்பட வெளியீட்டை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். எங்களிடம் உள்ள திறமைகளை வைத்து பல வெற்றிகரமான திரைப்படங்களை உருவாக்கித் தரமுடியும் என்ற நம்பிக்கை உள்ளது. எனினும் சில விஷமிகள் மூலம் சில ஆதாரமற்ற செய்திகள் பரப்பியதை நாங்கள் ஊடகங்களுக்கும் பொதுமக்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டியது எங்களுடைய கடமை.

லைக்கா புரொடக்சன்ஸ் குறித்து; லைக்கா புரொடக்சன்ஸ் என்பது தரமான தமிழ் சினிமாவை உருவாக்கக் கூடிய லைக்கா குழுமத்தின் ஒரு





# செப்டம்பர் 19,20,21இல் லண்டனில் நடைபெற்ற திருமுறைப் பெருவிழா









படங்கள் உதவி:
டக்டர் ஜெகநாதன், தம்பு



23ஆம் பாக்கத் தொடர்ச்சி

அங்கமாகும். ஐங்கரன் திரு.கருணாமூர்த்தியுடன் இணைந்து இந்நிறுவனம் திரைப்படத்தை லைக்கா புரொடக்சன்ஸ் பேனரலில் உருவாக்கும் நோக்கில் தொடங்கப்பட்டது. கடந்த 27 ஆண்டுகளாக திரு. கருணாமூர்த்தி 2000 ற்கும் மேற்பட்ட தமிழ்படங்களை வெளிநாடுகளுக்கு விநியோகித்துக் கொண்டு வருகிறார். பிரிவோம் சந்திப்போம் என்பது ஞானம் புரொடக்சன்ஸ் ன் முதல் தயாரிப்பு. இது பின்னர் லைக்கா புரொடக்சன்ஸ் என்று பெயர் மாற்றப்பட்டது. இவர்களின் அடுத்த வெளியீடு கத்தி என்ற திரைப்படம். மேலும் இது குறித்த விவரங்களுக்கு www.lycaproductions.in செல்லவும்

லைக்கா மொபைல்ஸ் மற்றும் லைக்கா குழுமம் பற்றி; லைக்கா மொபைல்ஸ் அழைப்பு அட்டை (காலிங் கார்ட்) நிறுவனம் 17 நாடுகளில் 30 மில்லியன் சந்தாதாரர்களை குறைந்த செலவில் உயர்தர சர்வதேச அழைப்புகள் மூலம் இணைப்புத் தீர்வு வழங்க 2001 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் லண்டனில் உள்ள O2 அரினா என்ற மாபெரும் அரங்கில் மேஸ்ட்ரோ இளையராஜாவின் இன்னிசை நிகழ்ச்சியை நடத்தியது. இதில் பத்ம கமல்ஹாசன் அவர்களும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. லைக்கா குழுமம் உலகம் முழுவதும் தமிழ் மக்களுக்காக பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. 10,000 ஊழியர்களுக்கும் மேல் உள்ள இந்நிறுவனம் இன்று 2 பில்லியன் யூரோவாக நிறுவனமாக வளர்ந்துள்ளது. மேலும் விவரங்களுக்கு www.lycatelecom.in சென்று பார்க்கவும்.

ஞானம் ஃபௌண்டேஷன்ஸ்; லைக்கா குழுமத்தின் தலைவர் திரு. சுபாஸ்கரன் அல்லிராஜா 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அவரின் தாயின் பெயரான திருமதி ஞானாம்பிகை அல்லிராஜா நினைவாக ஞானம் ஃபௌன்டேஷன் என்ற நிறுவனத்தை நிறுவினார். ஒதுக்கப்பட்ட சமூகங்களுக்கு ஒரு நியாயமான வாழ்க்கை தரத்தை வழி வகுப்பதே இதன் நோக்கமாகும். ஞானம் பௌண்டேஷன்ஸ் உலகம் முழுவதும் பல நாடுகளில் தொண்டாற்றி வருகிறது. மேலும் விவரங்களுக்கு www. gnanam-foundations.org





கரவை மு. தயாளன்



# சில மனிதர்களும் சில நியாயங்களும்

பாலா சரியான சாட்சி வேண்டும் என்று கூற மகேந்திரம் சில விடயங்களை தெளிவு படுத்த வேண்டும் என்று கூறினார்.

முதலில் தாஸின் நண்பன் எந்த நாட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறான் என்பதைக் கண்டு பிடிக்கவேண்டும். அதைக் கண்டு பிடிச்சாத்தான் எல்லாம் சரிவரும். அத்தோடை நானும் பாலாவின் அந்த இடத்திலை நிண்ட மற்ற நண்பனின்ரை வீட்டை போய் கதைக்க வேணும். மற்றது அந்த இடத்திலை கமரா பொருத்தி இருக்குது. கவுன்சில் காரரோடை கதைச்சு அந்தக் கமராவையும் சாட்சியாக்க வேண்டும். பாலா நீங்கள் வழக்கிலை கமராவைப் பற்றிச் சொல்லி கமராவின் பதிவை நீங்கள் பார்க்கவேண்டு மென்று ஒரு கோரிக்கை விடுங்கோ. உண்மையான சம்பவம் அதிலை கட்டாயம் பதிஞ்சிருக்கும். அந்தச் சந்தர்ப்பத்திலை உண்மையான குற்றவாளி இருக்கிற நாட்டை நாங்கள் சொல்ல வழக்கு எங்களுக்குச் சாதகமாக மாறியிடும். எந்த நாடு எண்டதைக் கண்டு பிடிக்கிற வேலையைத் தாஸிடமே விடுவம்.

தாசும் தலையாட்ட பாலாவிடம் விடைபெற்றுக் கொண்டு எல்லாரும் புறப்பட்டனர்.

மகேந்திரம் களைத்திருந்தார். நேரே வீட்டுக்குச் சென்றனர்.

தாஸின் அப்பாவும் தாசும் தங்கள் வீட்டருகில் இறங்கிக் கொண்டனர்.

மகேந்திரம் வீட்டை நோக்கிச் சென்றார்.

வீட்டில் மதிவதனியும் ஆரணியும் ஆவலோடை காத்துக்கொண்டிருந்தனர்.

ஆதித்யா சமையலறையில் ஏதோ சமைத்துக் கொண்டிருந்தாள். சாரங்கன் வீட்டிற்குப் போயிருந்தான்.

கதவு தட்டிச் சத்தம் கேட்டது.

மகேந்திரம்தான் வந்திருந்தவர்.

அவர் உள்ளே வந்து தொப்பென்று கதிரையில் அமர்ந்தார்.

அவர் நன்கு களைத்துஜீருக்கிறார் என்பது மதிவதனிக்குப் புரிந்தது.

"கொஞ்சம் தேத்தண்ணி போட்டு வரவே" என்றாள்.

அவரும் தலையாட்ட அதற்குள் ஆதித்யா தேநீரோடு வந்தாள்.

மகேந்திரம் அதனை வாங்கிக் குடித்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.

ஆதித்யா தகப்பனுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டாள். என்ன நடந்ததென்பதை அறிய ஆரணி துடித்துக் கொண்டிருந்தாள். ஆரணியின் துடிதுடிப்பைப் புரிந்து கொண்ட ஆதித்யா

மெல்லச் சம்பாசணையை ஆரம்பித்தாள்.

"அப்பா என்ன நடந்தது.?"

"இதொரு சின்னக் கேசம்மா. எந்தவிதக் கொம்பிளிக்கேசனும் இல்லை."

ஆரணியின் கண்கள் சிரித்தன.

"ஆரணி பயப்பிடாதை அப்பா வந்திட்டன். இனி எல்லாவற்றையும் சரி பண்ணித்தருவன்"

இவ்வளவு நாளும் தகப்பனை தான் வெறுத்தொதுக்கிக் கதைத்த கதைகளும் அவர் முன்பொருக்கால் வந்திருந்தபோது அவரை ஏளனமாகத்தான் தான் பேசியதையும் நினைத்து தனக்குள் தானே வெட்கித் தலை குனிந்து கொண்டிருந்தாள்.


இதனைப் புரிந்து கொண்ட மகேந்திரம்



அவளுக்கருகில் சென்று அவளின் தலையை மெதுவாகத் தடவிக் கொடுத்தார்.

அதில் தன்னுடைய பங்கும் கணிசமாக உள்ளதென்பதை அவர் உணர்ந்திருந்தார்.

தன்னுடைய சுயவிருப்பிற்காக பிள்ளைகளையும் மனைவியையும் விட்டு ஊர் சென்றது தவறோ என்று அவரது மனம் சங்கடப்பட்டது.



பிள்ளைகளை இந்தளவுக்கு வளர்த்து படிப்பித்து உருவாக்கிய தன் மனைவியை பெருமிதமாகப் பார்த்தார். மதிவதனியின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அதே நேரம் அவரின் கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தோடியது.

சூழ்நிலையின் இறுக்கத்தைப் புரிந்து கொண்ட ஆதித்யா நிலைமையை சமாளிக்க "சாப்பாடு தயார் எழும்புங்கோ. சாப்பிடுவம்" என்றாள்.

"சாரங்கனும் வந்தாப்போலை சாப்பிடுவம்" என்றார் மகேந்திரம்.

ஆதித்யா போனை எடுத்து சாரங்கனுக்குக் கெதியாய் வரும்படி கூறினாள்.

சூழ்நிலை கொஞ்சம் சகஜமானது.

அப்போது தொலைபேசி மணி அடித்தது.

ஆதித்யா போய் எடுத்தாள்.

மறுபக்கத்தில் சிவராசன்.

"நான் மகேந்திரத்தின் கிளாஸ்மேற். அவரோடை கதைக்கலாமோ?"

"ஓமோம். அப்பா நிற்கிறார் குடுக்கிறன் கதையுங்கோ"

"அப்பா உங்கடை கிளாஸ்மேற் சிவராசன்" என்று கூறிவிட்டு தொலைபேசியைக் குடுத்தாள்.

"ஹலோ சிவா.. எப்பிடி.. என்னன்டு தெரியும் நான் வந்ததெண்டு.. என்னபாடு"

கதை தொடர்ந்து கொண்டிருந்தது. சுவரடிசியமான ஒரு கட்டம் வந்தது. எல்லோரும் காதைக் குடுத்தனர்.

"இல்லையடாப்பா எனக்கு அப்பிடி எண்ணமில்லை. பிள்ளையளின்ரை சில விடயங்களை முடிச்சுப்போட்டு நான் வெளிக்கிட்டுடுவன்.."

மகேந்தரத்தார் இப்பிடிச் சொல்லவும் எல்லாரும் திகைத்துப் போய் அவரைப் பார்த்தனர்.

கொஞ்சநேரம் யாரும் எதுவும் கதைக்கவுமில்லை எதுவும் செய்யவுமில்லை. இந்த மாற்றங்கள் எதுவும்

தெரியாமல் வளவளவெண்டு மகேந்திரம் சிவராசனுடன் கதைத்துக் கொண்டிருந்தார்.

(இன்னும் வரும்...)

# பல்வேறு பயன் தரும் பனைமரம்

## நுணாவிலூர் கா. விசயரத்தினம் (இலண்டன்)


நூல் அறிமுகம்

இலக்கிய ஆய்வு நூலுக்கான 'எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்' வழங்கிய 'தமிழியல் விருது 2011' என்ற பரிசைப் பெற்ற, செந்தமிழ் செழிக்கும் யாழ் மண்ணில் நுணாவிலூர் எனும் பூங்காவில்; மலர்ந்தெழுந்த நுணாவிலூர் கா. விசயரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட 'பல்வேறு பயன் தரும் பனைமரம்' என்ற ஆய்வு நூலொன்று அண்மையில் வெளிவந்துள்ளது. இந்நூலில், பல்வேறு பயன் தரும் பனைமரம், சங்க இலக்கியங்களில் பவனி வரும் விலங்குகளும் பறந்து பறந்து கீதம் பாடும் பறவைகளும், புகழ் நாடாது ஊதியம் பெறாது தீந்தேன் தரும் தேனீக்கள், மண்ணின் மாண்பும் மரத்தின் மாட்சியும், ஐந்திணைகளில் அமைந்த பதினான்கு வகையான வேறுபட்ட கருப்பொருள்கள், தேசத்துக்குப் பொருத்தமான தொழில்நுட்ப முறைகள், தொல்காப்பியம் அகநானூறு சிலப்பதிகாரம் காட்டும் கரணவியல், ஆண் பெண் பேதம் பேசும் தமிழ் இலக்கியப் பாங்கு, உலகரங்கில் நேர்மையும் தலைமையும், கலப்புத் திருமணம், இயமராசன் தமிழனுக்கு அளித்த வரம், ஐக்கிய நாடுகள் அமைப்பு, உலக நெறியான மனித நேயம், குடும்பமும் ஒற்றுமையும், கல்வியின் வருங்காலம், பூவுலகைப் படித்தல், சொர்க்;கம் தரும் சுகம், இலக்கியம் சார்ந்த போட்டிகள், மனிதநேயத் தொடர்புகள், சொர்க்கம்! நரகம்! மறுபிறப்பு! கற்பனையா? நிசமா?, உலக சமாதானம் பேசும் இலக்கியங்கள், மகப்பேற்றிலும் மகத்தான உலக சாதனை படைக்கும் பெண்கள், மனித உரிமைகள் அன்றும் இன்றும், சனப்பெருக்கம் உலகிற்கோர் ஏற்றம் ஆகியவை பற்றி அலசப்பட்டுப் பேசப்பட்டுள்ளன. இவை இலக்கியம், இதிகாசம், உலகரங்கு, வாழ்வியல், மனிதநேயம், விலங்கியல், வானியல், பொருளாதாரம், தாவரவியல் ஆகிய பொருட்பிரிவுகளின் அடக்கமாகும்.

மனிதனுக்குமுன் தோன்றிய பனைமரம், அதன் கதை, காணப்படும் நாடுகள், தோற்றுவாய், கிளைப்பனை, பனை பற்றிப் பேசும் இலக்கியங்கள், பனையின் சிறப்பு, பனை தரும் உணவுப்பொருட்கள் பதநீர், நுங்கு, பனம்பழம், ஒடியல், பனங்கிழங்கு, பூரான், புழுக்கொடியல், பனஞ்சோறு, ஒடியற்பிட்டு, பனை தரும் உணவிலிப் பொருட்கள் பனைஓலை, காவோலை, மனைமட்டை, பனை ஈர்க்கு, கங்குமட்டை, பன்னாடை, பணிவில், உலகில் சுமார் 14 கோடி பனைமரங்கள் வளர்ந்து கொண்டிருக்கும் செய்திகள் போன்ற பல விடயங்கள் கூறப்படுகின்றன.

சங்க நூல்களில் இலக்கியம், அறிவியல், வாழ்வியல், இயற்கை வளம், உயிரியல், அறவியல் போன்றவை நிரம்பி வழிதலைக் காண்கின்றோம். இவையின்றி அவை உயிர் பெறாதெனலாம். மண்ணைப் பார்த்து விலங்குகள் பவனி வருவதையும், விண்ணைப் பார்த்துப் பறவைகள் பறந்து கீதம் பாடுவதையும் கண்ணுற்று அளவிலா ஆனந்தமடைகிறோம். சங்க இலக்கியங்களான தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் பல்வேறுபட்ட விலங்கினங்களும், பறவையினங்களும் பேசப்பட்டுள்ள பாங்கினையும் காணலாம்.

ஒரு தேன் கூட்டில் ஓர் இராணித் தேனீ, பல ஆயிரம் ஆண் தேனீக்கள், பல்லாயிரம் பெண் உழைப்பாளித் தேனீக்கள் ஆகிய மூவகைத் தேனீக்கள் ஒற்றுமையாக




வாழ்கின்றன. ஒரு சாதாரணத் தேன் கூட்டில் இருபதாயிரம் (20,000) முதல் முப்பதாயிரம்; (30,000) வரையான தேனீக்கள் உள்ளன.

மண், மரங்களுக்கு முன்பும், மரங்கள் மனிதனுக்கு முன்பும் தோன்றியவை. மண்ணின்றி மரங்களில்லை. மரங்களின்றி மனித வாழ்வு நிறைவில்லை. மண், மரங்கள், மனிதன் ஆகிய மூன்றும் ஒன்றுடனொன்று இறுகிய தொடர்பிலுள்ளன. இவையின்றி உலகமுமில்லையெனலாம். நிலம் பற்றியும், மண் பற்றியும், மரங்கள் பற்றியும் சங்க இலக்கியங்களில் நிறையப் பேசப்பட்டுள்ளதையும் காண்கின்றோம். மரங்கள் முப்பத்தெட்டுக்கோடி (38,00,00,000) ஆண்டுகளுக்குமுன் தோன்றியவை.

கரணவியல் (சடங்கு முறைகள்) பற்றித் தொல்காப்பியம், அகநானூறு, சிலப்பதிகாரம் ஆகிய சங்க நூல்கள் காட்டும் வேறுபட்ட சடங்கு முறைகளையும் காண்கின்றோம். தொல்காப்பியர் காலத்திலும், அகநானூற்றுக் காலத்திலும் பார்ப்பான் மணவிழாவிற் பங்கேற்கவில்லை. ஆனால், சிலப்பதிகாரத்தில் முதன்முதலாகப் பார்ப்பான் பங்கேற்று, தம்பதியினர் தீவலம் வந்து, மணவிழா நிறைவு பெற்றுள்ளது.

தொல்காப்பியம், குறுந்தொகை, புறநானூறு, திருக்குறள், திருமந்திரம், மனுநீதி நூல், நீதிநெறி நூல்கள், பழமொழிகள், திருவாசகம், பாரதியார் கவிதைகள், கண்ணதாசன் பாடல்கள் ஆகிய நூல்களில் ஆண், பெண் ஏற்றத் தாழ்வுகள் தரப்பட்டுள்ளன.

திருமணங்களிற் பல நடைமுறைகள் உள்ளன. அவற்றில் கலப்புத் திருமணம் ஒன்றாகும். அது பற்றி இவை ஒரு சிலவாகும்: (1) இணைப்புறவுக் கலப்பு மணம், (2) வெள;வேறு இனங்களுக்கிடையே நிகழும் திருமணம், (3) நாடுகடந்து சென்று அங்குள்ள ஆண், பெண்ணை மணம் புரிதல், (4) இனக் கலப்புத் திருமணம், (5) கணவன் மனைவி போன்று பிறரோடு இணைந்து வாழ்தல் ஆகியனவாம். கலப்புத் திருமணத்திலும் நன்மைகளும், தீமைகளும் உள. ஆனால் நீண்ட வாழ்நாளில் கலப்புத் திருமணத்தால் தீமைகளை விட அதிக நன்மைகளே கிட்டும் எனலாம்.

'குடும்பமும் ஒற்றுமையும'; என்ற ஆக்கத்தில் குடும்பம் என்பது கணவன், மனைவி, குழந்தைகள், உறவினர் எல்லாரும் ஒன்றுகூடி வாழும் ஒரு சமூக அமைப்பு. இதுவே இல்லற வாழ்க்கையுமாகும். அது அன்று நிலைத்திருந்தது. இன்று அது சிதைந்து, 'தனிக் குடித்தனம்' ஆகிவிட்டது. சங்ககால அறிவுரைகள், நம் முன்னோர் வாழ்ந்து விட்டுச் சென்ற வாழ்வியல் முறைகள், எச்சங்கள், பிறர் அனுபவங்கள் யாவும் எம்மை ஆற்றுப்படுத்தி நிற்க, குடும்பமும் ஒற்றுமையும் சீர்பெறும் என்பது திண்ணம்.

டாக்டர் சிவ தியாகராஜா அவர்களின் அணிந்துரையும், செல்வன். பிரவின் யெயராசா அவர்களின் அட்டைப்பட ஓவியமும் இந்நூலை மேலும் அலங்கரித்து நிற்கின்றன.

இந் நூலைப் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:

K. Wijeyaratnam, 35, Southborough Road,
Bickley, Bromley, Kent. BR1 2EA
pages:- 212, Tele No. 020 3489 6569
E-mail :- wijey@talktalk.net

காவியன்

பாகம் 2




# கட்டடக்காடு

*பசுந்திரா சசி*

## நாய், பூனை நாட்டில் மனிதன் காட்டில்



அன்று ஞாயிற்றுக்கிழமை அகழ்வு வேலைகள் எதுவும் இன்றி எல்லோரும் நன்றாக தூங்கிக் கொண்டு இருந்தார்கள். தர்மராஜா மாஸ்டர் மட்டும் அவர்களின் கொட்டகைக்கு அருகில் நின்ற உயர்ந்த மரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த வட்ட வடிவக் குடை போன்ற கொட்டிலின் கீழ் இருந்து காலைக் காற்றை இதமாக அனுபவித்தபடி வார இறுதி ஆங்கிலப் பத்திரிக்கையை வாசித்துக் கொண்டிருந்தார். அருகில் தேனீர் ஆவி பறந்தபடி இருந்தது.

சீனு "காந்து.... காந்து... டேய் காந்தன் நான் ஆத்தடிக்குப் போறன். வர நேரமாகும்" என்றான். போர்வையை இழுத்துப் போர்த்தியபடியே "ம்" என்று விட்டு மறுக்கம் திரும்பிப் படுத்தான் காந்தன்.

சீனு அம்மா செய்து கொடுத்துவிட்ட மிக்சர் பையுடன் ஒரு குடி நீர்ப் போத்தலையும் தனது கைப்பையில் போட்டுக் கொண்டு புறப்பட்டான். நேற்று அவன் அணிந்திருந்த அதே உடுப்பையே இன்றும் அணிந்து கொண்டான்.

பத்திரிக்கையில் நிலைத்திருந்த மாஸ்டர் சற்றுக் கண்ணை உயர்த்தி அவனைப் பார்க்கவே அவருக்குச் சிறு புன்னகையோடு கையை சைகை செய்துவிட்டு துள்ளிக் குதித்து ஓடினான்.

சுற்றி அடைத்திருந்த முள்ளுக்கம்பி வேலியின் படலையைத் திறந்து அதனை மீண்டும் பூட்டிவிட்டு, வீரோவிடம் வாங்கி இடுப்பில் சொருகி இருந்த அந்தக் காட்டுவாசிகளின் 'க்கச்சுவா' (Quechua) மொழியின் ஆங்கில மொழிபெயர்ப்பு மற்றும் காடு பற்றிய மேலதிக விபரம் அடங்கிய நூலை வெளியே எடுத்தபடியே நதியை நோக்கி நடந்தான்.

பேரு நாட்டின் லாலிபரேட்டேட் பகுதியில் இவர்கள் முகாமிட்டுள்ள இடத்தில் இருந்து சுமார் 25 ரினீ முதல் 30 ரினீ சுற்றுவட்டாரத்தில் பூர்வீகக்குடிகள் யாரும் இல்லை என்றும், சிறு விமானத்தின் ஒலி, மற்றும் உயரமான தொலைபேசி பரிவர்த்தனைக் கோபுரம் போன்றவற்றால் இதுவரை எந்தக் காட்டுவாசிகளும் இதை அண்டிய பகுதியில் வேட்டையாடவோ, வேறு தேவைகளுக்கோ கூட வந்ததில்லை என்ற வன அதிகாரி வீரோவின் கூற்றைக் கேட்டதில் இருந்து சீனு மேலும் குழம்பி இருந்தான்.

அருகில் அமர்ந்திருந்தவனையே கணக்கில் எடுக்காமல் அவன் தலைக்கு மேல் அம்பு எய்து பழம் புடுங்கிய அந்த வனமாது எங்கே? இந்தக் காட்டு இலாகா அதிகாரியின் அனுமானம் எங்கே? அவர் பேசப் பேச எல்லாவற்றையும் 'ஆம்... ஆம் என்று தலையாட்டிக் கேட்டானே தவிர, மற்றது ஏதும் பேசவில்லை. இவன் கண்ட மாது பற்றியும் வாய் திறக்கவில்லை.

வனத்துறை அதிகாரி வீரோவின் துணையின்றி இந்த காட்டில் எதையும் செய்து விட முடியாது என்பதை மட்டும் தெளிவாகத் தெரிந்து கொண்டான். அவர் பேசும் மொழி கூட இந்த பூர்வகுடிகளின் மொழியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது என்பதையும் விவரமே மிகவும் விசித்திரமானது. இந்தக் காட்டின் எல்லைப் பகுதியில் வாழும் மக்கள் பலரின் உயிரை அந்த முறையிலேயே காப்பாற்றியதாகவும் அவர் கூறியது அவனை வியப்பில் ஆழ்த்தியது. மீண்டும் ஒருமுறை அதை மீட்டிப் பார்த்தான். திடீரென காட்டில் யாரையும் கண்டால், அல்லது எதிரும் புதிருமாகச் சந்தித்தால் "கூ... கூ..." என்று இருமுறை "கூ" காட்ட வேண்டும். அதற்குப் பதில் அவர்கள் "கூ" அடிக்கும் வரை அமைதியாக இருக்க வேண்டும். நகரக் கூடாது. அவர்கள் பதுங்கி இருந்து எம்மை அவதானிப்பார்கள். எம்மில் நம்பிக்கை வந்தால் அவர்களும் பதிலுக்கு 'கூ' எனக் கத்துவார்கள். ஒருவேளை அவர்கள் 'கூ' காட்டவில்லையென்றால் அவர்கள் கடந்து போகும் வரை நகராமல், அசையாமல் சிலையாக நிற்க வேண்டும். அவர்கள் தொலைத்தூரம் போன பின் பதில் "கூ" அடிப்பார்கள். அதன்பின் நாம் அவ்விடத்தை விட்டு வேறு ஒரு திசையில் சென்று விட வேண்டும். தவறி அவர்களைக் கண்டு பயந்து ஒளிந்தாலோ, 'இல்லை சிதறி ஓடினாலோ விச அம்பு பாய்வது நிச்சயம்.

சீனு நதிக்கரையில் அன்று இருந்த அதே இடத்தில் அமர்ந்து அவளை முதல் முதல் கண்ட நிகழ்வை அசை போட்டுக் கொண்டு இருந்தான். நேரம் மதியம் 12 ஆகிக் கொண்டிருந்தது. கடந்த இரண்டு நாட்களாக அவனால் நதிக்கரைக்கு வரவோ அவளைப் பார்க்கவோ முடியாமல் தவித்தவன் மனதில் இன்று சற்று அமைதி இருந்தது. ஆனால் நேரம் ஆக ஆக மீண்டும் ஒரு வகைத் தவிப்பு குடியேறியது.

ஒருவேளை இட்ன்ஹ இரு நாட்களுக்குள் அவள் வந்து போயிருப்பாளோ? இன்று கூட அவள் வந்தால் 'ஹலோ சொல்லி, கையை தருவாள்?' இல்லவே இல்லை. அப்படியானால் எப்படி அவளை அணுகுவது? எப்படி ஆரம்பிப்பது? முடிவு எடுக்க ஆசைப்பட்டான். ஆனால் ஆரம்பங்கள் எதுவும் அவன் அறிவுக்கு எட்டவில்லை.

அவள் போன பாதைத் தடம் பார்த்து, போனால் என்ன? எந்த பெண்ணின் பின்னாலும் இதுவரை போனதில்லை. ஆனால் இன்றோ மரணம் கூட இடைமறித்து வரவேற்கும் பாதையில் நடக்க மனம் ஏங்கித் துடித்தது. ஏன்? ஏன்? நிச்சயமாக, இது காமம் இல்லை. அப்படியானல் காதலா? இல்லை வேறு ஏதும் ஒன்றா? காதல் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற விதி இல்லாத ஈதும் ஒன்று. அதன் வரைவிலக்கணம் அது எப்படியும் இருக்கலாம் என்பதே. ஆனால் அவன் புத்திசாலி. உலக நடை அறிந்து பழகுவான். பைத்தியக்காரத்தனமாக எதையும் அணுக விரும்பாத பகுத்தறிவாளன். அப்படியானால்? அவளுக்கு உதவ வேண்டும். அவர்களின் வாழ்க்கை முறையை அறிய வேண்டும். அவர்களையும் நாட்டு வாழ்க்கை அழைத்து வரவேண்டும்.

எம்முன் வாழும் நாய், பூனை, ஆடு, மாடு இவற்றை எல்லாம் நாம் காட்டில் இருந்து நாகரீகம் அடைந்து நாட்டிற்குள் வரும்போது கொண்டு வந்து விட்டோம். ஆனால், நம் இணமான இந்த மனிதர்களை மட்டும் ஏன் இன்னமும் காட்டிலேயே விட்டு விட்டோம். இது எப்படி நியாயம்? இந்த அரசுகள் என்ன செய்கின்றன? ஒரே குடும்பத்துப் பிளைகளில் ஒருவன் நிலாவைக் கடந்து செவ்வாயை நோக்கிப் பயணிக்க, மற்றயவன் மானக் காக்கத் துணியும் இன்றி, உணவு தேடப் போகும் வழியில் உணவாகிப் போகும் வாழ்வா?

'தனி ஒருவனுக்கு உணவு இல்லையேல் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்' என்ற பாரதியின் ஏக்கம், நாட்டில் இருக்கும் மனிதனுக்கு மட்டுமா? இந்தக் காட்டில் இருப்பவனுக்குப் பொருந்தாதா? எதை எதையோ எல்லாம் எண்ணியவனின் கண்கள் மட்டும் அந்த நீர் நிலையையே பார்த்துக் கொண்டு இருந்தது.

சிறிது நேரத்தின் பின் எழுந்து மரத்தில் தொங்கிய பழத்தைப் பார்த்தபடி நின்றான். அவள் நிச்சயம் இந்தக் கனியைத் தேடி வருவாள், அனேகமாக வேறு எங்கும் இந்த மரம் இல்லாது இருக்க வேண்டும் அல்லது இந்தப் பருவம் (சீசன்) முடியும் தறுவாயில் இருக்க வேண்டும். அவளைப் பார்ப்பது போலவே அந்தக் கனியைப் பார்த்துக் கொண்டு நின்றவன் ஒருவேளை அவள் வந்தால் நான் இங்கு நிற்பது நல்லதல்ல. அதே இடத்தில் அதே திசையைப் பார்த்தபடி அல்லவா? நான் இருக்க வேண்டும் என்று ஏறக்குறைய 15 முறைக்கு மேல் இப்படி வருவதும் பின் போய் அமர்வதுமாக இருந்தான்.

நதியைப் பார்த்துக் கொண்டு இருந்தவனுக்கு அவள் அந்தப் பற்றைக்குப் பின்னால் வந்தது போல் ஓர் ஊனர்வு. மெதுவாகத் திரும்பி பார்த்தான். இப்போது அவள் நதியில் குதித்து விட்டதாகத் தோன்றியது. நதியைப் பார்த்து அங்கே தலையைத் தூக்குவாளா? இல்லை இங்கே தலையைத் தூக்குவாளா? என்று அலை மோதி இறுதியில் அண்ணாந்து பழத்தைப் பார்த்துக் கனி இன்னமும் அங்கேயே இருக்கக் கண்டு எல்லாமே மாயை என்று தனக்குள் சிரித்தான். நேரம் மதியம் கடந்து கொண்டிருந்தது.

ஒருவேளை அவள் வந்தால் மறைவில் இருந்து அவளின் செயலைப் பார்க்க வேண்டும். அவள் முகத்தை ஒரு முறையாவது பார்த்து விடவேண்டும். மறைந்திருந்து பார்க்க போய் விச அம்பு பாய்ந்து விட்டால் என்ன செய்வது? எனவே வன அதிகாரி வீரோ சொன்னது போல் 'கூ' அடிக்க வேண்டும். ஏன்? அவள் எனக்குத் தெரியாமலேயே, எனக்கு மேலே இருக்கும் பழத்திற்கு அம்பு எய்யலாம்? அது இவர்களின் காட்டு விதிகளுக்கு ஒப்பானது. (ஆனால் நான் கூ காட்டா விட்டால் விதி மீறலா? அவாவுக்கு ஒரு சட்டம்? எனக்கு ஒரு சட்டமா? கூ எல்லாம் காட்ட முடியாது. நான் இருந்த இடத்தில்தான் இருப்பேன். விரும்பினால் அவள் கூ சொல்லட்டும். அதன் பின் பார்த்துக் கொள்ளலாம்.) ஒருவேளை கூ காட்டி வரவைத் தெரியப்படுத்துவது இவளுக்கு தெரியாமல் இருக்கலாமோ?

அவள் தனக்கு பாதுகாப்புக்காக ஆயுதம் வைத்திருப்பதால் கூ காட்டத் தேவையில்லை என்ற திண்ச்சலோ? ஏன் நானும் ஏதும் வைத்திருந்து அவளைக் கண்டு வெருண்டு ஏதும் செய்ய நினைத்திருந்தால் என்ன செய்திருப்பாள்? எல்லாம் குழப்பமாக இருந்ததே தவிர, எதற்கும் ஏற்றுக் கொள்ளத்தக்க பதில் கிடைக்கவில்லை. ஆனாலும் அது போகு கழுதை என விட்டு விடவும் அவனால் முடியவில்லை. பல புத்திக் கூர்மையான பெண்களை அவன் சந்தித்திருக்கிறான். பல அழகான பெண்களைப் பார்த்திருக்கிறான். ஏன் பல தைரியசாலியான பெண்களைக் கூடக் கேள்விப்பட்டு இருக்கிறான். ஆனால் இம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற ஓர் அசாதாரணப் பெண்ணை இதுவரை கண்டதில்லை. மீண்டும் மீண்டும் அவளையே அவன் மனம் சுற்றிக் கொண்டு இருந்தது.

வன இலாகா அதிகாரி சொன்னாரே தான் அவர்களிடம் சிறைப்பட்டதால்தான் அவர்களைப் பற்றி தெரிய வந்ததாகவும், அவர்கள் யாரும் உயிருக்குப் பயந்தவர்கள் இல்லை என்றும், தான் தப்புவதற்காக அவர்களில் ஒரு சிலரைச் சுட்டிருக்கலாம். எனது குண்டு துளைத்த பின்னும் கூட அவர்கள் உயிர் வாழ சந்தர்ப்பங்கள் உண்டு. ஆனால் அவர்களின் விச அம்பு தோலில் சிறு கீறல் ஏற்படுத்தினாலே போதும். அடுத்த கணம் இறப்பது உறுதி என்பது தெரிந்ததால்தான், அவ்வாறு ஏதும் செய்யாமல் அவர்களிடம் பிடிப்பட்டதாகவும், அதனாலே தான் இன்றும் உயிருடன் இருப்பதாகவும் வியந்தார். ஆனால் இவள் அப்படி ஒன்றும் கொடுமையானவள் போல் தெரியவில்லையே? இவள் என்னைக் கைது செய்து கொண்டு அல்லவா சென்றிருக்க வேண்டும். ஒரு வேளை இனி அவ்வாறு அவள் செய்ய முனைந்தால் என்ன செய்வது? அவளோட போக வேண்டியதுதான். மாறாக அம்பு எய்தால்..? வாங்கிக்கொள்ள வேண்டியதுதான். ஒரு அப்பாவியைக் கொன்று விட்டோமே என்று எண்ணுவாளா? இல்லை ஓடி வந்து மருந்து போடுவாளா? நல்லா இருக்குதே என் கற்பனை. கூடு கட்ட இடம் இல்லாம குருவி பீரங்கிக் குழல்ல கூடு கட்டின கதையாக அல்லவா இது முடியும். அவள் வரும் வரை இங்கே அமைதியாக அன்று போல் காத்திருக்க வேண்டும். வந்த பின் பார்த்துக் கொள்ளலாம் என அவ்விடத்தைச் சுற்றிச் சுற்றி வந்தான். அன்று மட்டும் ஏனோ அந்நதியில் கானல் நீர் ஓடிக்கொண்டு இருந்தது. அவள் நினைவு மட்டும் பச்சையாக இருக்க சுற்றி எல்லாம் பதராகவே இருந்தது.

அவள் வந்தாள், குதித்தாள். ஆனால் எழுந்திருக்கவில்லை. பலமுறை குதிக்காமலே நீரில் இருந்து எழுந்து நடந்தாள்.

என்ன ஆயிற்று இவனுக்கு. இது நிஜமா? கனவா? அவள் கண்களைக் காணவில்லை. ஏன் முகத்தைக்கூட காணவில்லை. அப்படி இருக்க எத்தனை முறை இரவு எழும்பி கண்ணாடி பார்த்திருப்பான். ஒரு கண்ணாடியா பார்த்தான். இரண்டு கண்ணாடியில் ஒரே நேரத்தில் பார்த்தான். முகமா பார்த்தான். பிடரி பார்த்தான். அதனால்தான் யாருக்கும் தெரியாமல் இரவு பார்த்தான். அவள் தன் பிடரியைத்தான் பார்த்திருப்பாள். பிடரி எப்படி இருந்திருக்கும் என இவன் பார்த்துக் கொண்டு இருந்தான்.

இப்போது சீனு மூச்சைப் பிடித்துக்கொண்டு ஆற்றுக்குள் இருக்கிறான். ஏதோ குதித்தது போல் இருக்கிறதாம். வெளி வரவில்லையாம். இது முதல் முறை அல்ல. கடைசி முறையும் அல்ல.

சீனு பாவம் போல் ஆகி விட்டான். இதைப் பொறுக்க முடியாத பகல் பதுங்கிக் கொண்டது. இரவு அவனை கொட்டகைக்கு அனுப்பியது. பொழுது பட்டு விட்ட ஒரே காரணத்தால் நதிக்கரையை நீங்கினான்.

தொடரும்

# வஞ்சக நெஞ்சின் வாய்ப்பாட்டு – வழிக்கு உதவாது

"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்ன சிவகதி தானே"

– திருமந்திரம்

முற்பிறவித் தீவினையாளர் சிவசிவ எனச் சொல்லும் வகையறிய மாட்டார்கள். ஆனால், சிவசிவ எனச் சொல்வாராயின் எத்தகைய தீவினைகள் ஆனாலும் அழிந்து போகும். அதுமட்டுமின்றி, சிவசிவ என்னும் திருநாமத்தைச் சொல்வோர், தேவர்களுள் ஒருவராக உயர்ந்த நிலையை அடைவர். சிவசிவ என்று சொன்னால், சிவபாதம் கிட்டும் – இது திருமூலரின் திருமந்திரப் பாடல் சொல்லும் பொருள். இவ்வரிகளில் உள்ள உண்மையை, மாசற்ற மனத்தினராய், மகேசனின் அருளை மட்டுமே வேண்டி நிற்கும் சைவ அடியார்கள் அறிவார்கள்.


திருப்புகழும், தேவாரமும் மற்றுமுள்ள திருமுறைகளும், பாடப்பாட உள்ளத்தில் உள்ள அழுக்கைக் கழுவி, அதை இறையனார் சிவன் வாசம் செய்யும் ஆலயமாக ஆக்கக் கூடியவைகள். எனவேதான், தேவாரம் பாடுவோர் மீது எனக்கு எப்போதும் அளவுகடந்த அன்பு உண்டு. அப்படித்தான், திருமிகு மகேஸ்வரன் என்பவர் மீதும் எனக்கு நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டது. காரணம், அவர் செய்துவந்த சில தெய்வ காரியங்கள்.

லண்டன் சிவன்கோயிலில் தேவாரம் பாடுபவர் அவர். 'தேவாரத் திரட்டு' என்னும் நூலினை ஆக்கி, அதனை வெளியிட்டு, அதில் வரும் வருமானத்தை, சைவம் சார்ந்த செயல்களுக்குக் கொடுத்துவந்தார். அப்படி யாழ்ப்பாணத்திலுள்ள சிவபூமி அறக்கட்டளைக்கும் உதவியிருக்கிறார். அவ் அறக்கட்டளையின் தலைவர் திருமுருகனிடம் தேவாரத் திரட்டு நூல் விற்பனையின் மூலம் கிடைத்த தொகையின் ஒரு பகுதியை அளித்திருக்கிறார். தேவாரமும் பாடுவார். அந்த வகையில் அவரிடத்தில் நான் மதிப்பு வைத்திருந்தேன் என்று சொன்னால், என் இயல்பு அறிந்த யாருக்கும் அது வியப்பைத் தராது என்பதை அறிவேன்.

காரணம், சைவத்தைப் பரப்புவதையும், திருமுறைகளை மேலோங்கச் செய்வதையும் என் வாழ்நாளில் இறைவனார் எனக்களித்த கட்டளையாக ஏற்றுச் செயல்பட்டு வருபவர் சிவானந்த சோதி என்பதை தமிழ் உறவுகள் நன்கறிவர். ஆனால் இந்த மகேஸ்வரன் மட்டில், என் கணிப்பு பிழையாகிப் போனது என்றே நான் திடமாகக் கருதுகிறேன்.

நடந்து முடிந்த, திருமுறைகள் மாநாட்டை ஒட்டி, தமிழர் தகவல் மாத இதழை, தேவாரச் சிறப்பிதழாகக் கொண்டு வந்தேன். எனவே அந்த இதழை, மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் லண்டன் சிவன்கோயிலில் வைத்தனர். அதைக் கண்ணுற்ற, மகேஸ்வரன், 'இதை ஏன் இங்கு வைத்தீர்கள்? தகவலை இங்கே வைக்கக்கூடாது' என்று அதிகாரத் தோரணையில் கூறியிருக்கிறார். சைவமும் தமிழும் இரண்டு கண்கள் என்று கொண்டு இதழ் பணியாற்றி வரும் தகவலின் மேல், ஒரு சைவரான அவருக்கு ஏன் இத்தனை காழ்ப்பு?

சிவாலயங்களின் அமைப்பு குறித்து தகவலில் தொடர்ந்து நான் எழுதி வருவதை அனைவரும் அறிவீர்கள். லண்டன் சிவன் கோயில் கட்டுமானப் பணிகள் நடந்தபோதும், அதிலிருந்த தவற்றை நான் சுட்டிக்காட்டினேன். தெற்கு நோக்கி



அம்மனுக்கு சன்னிதி அமைத்திருந்ததைத் தவறு என்று சொல்லி, அதை மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தியும் வந்தேன். சரி அதற்கும், மகேஸ்வரன் தகவலின் மேல் வெறுப்புக் காட்டுவதற்கும் என்ன தொடர்பு என்றுதானே கேட்கிறீர்கள்?

அவர் ஓதுவார் மட்டுமில்லை. அடிப்படையில் அவர் ஒரு பொறியாளரும் கூட. அன்று லண்டன் சிவன் கோயில் கட்டுமானத்தில் பொறியாளராக அவருடைய பங்கும் இருந்தது. இப்போது புரிகிறதா, அவரின் கடுப்புக்கான காரணம்? இன்னொன்றையும் இங்கே நான் குறிப்பிட வேண்டும். ஆலய அமைப்பு தவறாக இருப்பதால், இத்தனை ஆண்டுகளில் நான் லண்டன் சிவன் கோயிலுக்கு ஒருமுறை கூட போனதில்லை. இருப்பினும், திருமுறைகளுக்கென்று, ஒரு மாநாடு நடத்திய காரணத்தால், அந்த தவற்றைப் பொருட்படுத்தக் கூடாது என்று எண்ணி, தேவார சிறப்பிதழாக தகவலை வடிவமைத்து, அங்கு கொண்டு போய் வைத்தேன். அதற்குத்தான் மகேஸ்வரன் பொங்கி இருக்கிறார்.

தேவாரம் பாடுபவரின் மனத்தில் இத்தனை வஞ்சகம் குடிகொண்டிருக்குமா? இத்தகைய குணக்கேடுடையவர்களின் பாடலை எம்பெருமான் ஏற்பாரா? கண்டிப்பாக ஏற்க மாட்டார். இவரைப் போன்றோர் மனத்தினால் உணர்ந்து திருமுறைகளை ஓதுவதில்லை, உதட்டிலிருந்து வெறும் சொற்களாக உதிர்க்கின்றனர் அவ்வளவே!

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது நாதன் நாமம் நமச்சிவாயமே" என்னும் உண்மையை உணர்ந்தோர், வஞ்சக நெஞ்சின் வாய்ப்பாட்டு எந்த நன்மையையும் கொண்டு வந்து சேர்க்காது என்பதை அறிவர்.

போற்றுவோர் போற்றினும், தூற்றுவோர் தூற்றினும், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் நாவுக்கரசரின் நல்வரியை நெஞ்சில் தாங்கி, சைவத்திற்கும், தமிழுக்கும் தொண்டாற்றும் பணியில், நானும், தகவலும் தொய்வின்றி தொடர்வோம்.

# யார் பெரியவர்?



'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாடினார் பாரதி.

'இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்' என்று பாடினார் ஔவை.

இன்றும் அரசியல்வாதிகள் மனிதரிடையே சாதி, மதம், இனம் என்று பல வேற்றுமைகளை வளர்த்தே தங்கள் நலங்களை வளர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். உலகின் பல நாடுகளிலும் போர் நடப்பது மாற்று இனங்களுக்கு இடையேதான். மத்திய கிழக்கு நாடுகளில் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்தாலும் அந்த ஒரே மதத்துள்ளே பல்வேறு பிரிவுகள் உள. அதுபோல கிறித்துவம், சைவம், வைணவம் என்று எல்லா மதங்களிலும் வேறுபாடுகள், குழப்பங்கள், சண்டைகள் அவ்வப்போது நடந்துகொண்டுதான் இருக்கின்றன. சாதி என்றொரு வேற்றுமை இல்லாவிட்டாலும் ஊரின் பெயரால், இடத்தின் பெயரால், மதத்தின் பெயரால், மொழியின் பெயரால் வேற்றுமைகள் இருக்கின்றன. அதனாலே போட்டிகள், பொறாமைகள், சண்டைகள் என்று எப்போதும் ஏதோ நடந்தவண்ணமே உலகம் இயங்குகிறது.

நவீன உலகில் இன்னொரு வகையான பிரிவும் உள்ளது. பழைய சாதி அமைப்பு தொழில் சார்ந்து இருந்ததுபோலவே இந்தப் புதிய சாதியும் உருவாகியுள்ளது. மருத்துவர்கள் ஒரு சாதி. அவர்கள் வேறு மருத்துவர்களோடு

மட்டுந்தான் தொடர்பு கொள்வார்கள். மற்றவர்களைக் கண்டாலும் காணமாட்டார்கள். பொறியியல் துறை சார்ந்தவர்கள் அப்படி. வேறு பொறியியல் துறை சார்ந்தவர்களோடு மட்டுமே பேசுவார்கள். வணிகத்துறையில் உள்ளவர்கள் மற்றைய வணிகத் துறையில் உள்ளவர்களோடு பேசுவார்கள். இது பொது இடங்களிலே அன்றாடம் காணும் ஒரு அவதானிப்பு. ஒருவேளை அவர்களிடையே இலகுவாகத் தொடர்புகொள்ள அவரவர் தொழில் தொடர்பான அறிவு இருப்பது இதற்கான காரணமாகலாம். அல்லது வேறு விடயங்களிலே அவர்களுக்குள்ள அறிவு போதாமை காரணமாகவும் இருக்கலாம். இதற்கு விதிவிலக்குகளும் உண்டு.

ஆனால், ஒருவர் தான் செய்யும் தொழில் காரணமாகத் தான் மற்றவர்களைவிட உயர்ந்தவன் என்று நினைப்பது மடமை. ஒவ்வொரு தொழிலுமே உயர்ந்ததுதான். படைத்தல் தொழிலை விட, தான் செய்யும் காத்தல் தொழிலே உயர்ந்தது என்று நினைத்த விட்டுணுவும், காத்தலை விடப் படைத்தலே உயர்ந்தது என்று நினைத்த பிரம்மாவும் சண்டையிட்டது புராணக்கதை. படைப்பது காத்தலை விடக் கடினம் என்றோ, காப்பது படைப்பதைவிடக் கடினமென்றோ கூறமுடியுமா? அவர்கள் அந்தச் சண்டையால் என்ன ஆனார்கள் என்பதும் நாம் அறிவோம்.

குருவி கூடுகட்டுகிறது. அதுபோல அழகாக வேறு எந்த மிருகமோ, மனிதனோ கூடு கட்டமுடியாது. அரக்கு ஒட்ட உதவுகிறது. அதுபோல வேறெதுவும் ஒட்ட உதவாது. இப்பொழுது நாம் பயன்படுத்தும் 'சுப்பர் குளு' அது. கறையான் புற்று அமைப்பதுபோல வேறுயாரும் புற்று அமைக்க முடியாது. 'கறையான் புற்றெடுக்க, பாம்பு குடிகொண்டதுபோல' என்ற பழமொழியும் இதை விளக்கும். அழகிய மலர்கள்தோறும் சென்று தேன் எடுக்கும் தேனீ கூடுகட்டுவது ஒரு தனிவகை. அதிலே தம் குடும்பம் இருக்க இல்லமும் தேனைச் சேகரித்துவைக்க, சிந்தாது பாதுகாப்பாக இருக்கச் சில சேமிப்பு அறைகளையுமல்லவா கட்டிவைக்கிறது. சிலந்தி வலை பின்னுவதுபோல வலை பின்ன முடியாது. அந்த வலையிலே அது ஓடும் வேகத்துக்கு அதன் இரை ஈடுகொடுக்க முடியாமல் அகப்படுகிறதே! இப்படியெல்லாம் உள்ள திறமைகளை நமக்கு விளக்கும் ஒரு அழகான வெண்பா இருக்கிறது.

வான்குருவி யின்கூடு வல்லரக்குத்
தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால்
யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல
வேண்டாங்காண்
எல்லோர்க்கும் ஒவ்வொன் றெளிது.

ஔவை பாடிய இந்தப் பாடல் தனிப்பாடல் தொகுப்பில் உள்ளது.

எல்லா உயிர்களிடத்தும் ஏதோவொரு திறமை இருக்கிறது. தாவரங்கள் முதல் மனிதர் வரை அந்தந்த இனத்துக்கும் இயல்புக்கும் ஏற்ப உள்ள திறமைகளை நாம் மதிக்கவேண்டும். அப்படி மதிக்கப் பழகினால் மற்றைய உயிர்களிடத்தில் அன்பு, அக்கறை, மரியாதை வரும். வேற்றுமை குறைந்து ஒற்றுமை வளரும். சண்டைகள் இன்றிச் சமாதானமாக வாழும் வழி அமையும். ஆனால் அரசியல்வாதிகளும் சுயநலமுள்ளவர்களும் தத்தம் வளர்ச்சிக்காக மற்றவர்களை நசுக்கியே வைத்திருப்பார்கள், வைத்திருக்க முயல்வார்கள்.

பாட்டுக்கள் எல்லாம் ஏட்டளவிலேதான்!

# மூதுரை



## சான்றோரின் கோபம்

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வரே - விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

கல்லைப் பிளந்தால் திரும்பவும் ஒட்டாததுபோல கயவர் ஒருவரிடம் கடுஞ்சினத்தால் பிரிந்தால் பிறகு கூட மாட்டார்கள். பொன்னைப் பிளந்தால் திரும்பவும் வேறு ஒருவரின் தயவுடன் கூடுவது போல் நடுதரத்தவர் கூடுவர். வில்லைப்பிடித்து நீரில் கிழிக்க, நீரானது உடனே எப்படி சேர்ந்துவிடுமோ அதுபோல சிறந்தவழியில் நடக்கும் சான்றோரின் கோபம் உடனே மறைந்து கூடுவர்.

(கருத்து - மூடர்கள் கோபம் கொண்டால் எப்பொழுதும் கூட மாட்டார்கள். நடுத்தரமானவர்கள் யாராவது கூட்டினால் கூடிவிடுவார்கள். அறிஞர்கள் தாமாகவே கூடிவிடுவார்கள் என்பதாம்)



அய்யன் திருவள்ளுவர் தமிழ் மன்றம்
வழங்கும்
மாதம் இரண்டு திருக்குறள்
இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள.
தமக்குள்ள
வறுமைத் துன்பத்தைக்
காட்டிக்கொள்ளாமல்
பிறருக்கு ஈவது
உயர்ந்த குடிப்பிறந்தவரின் பண்பாகும்.
ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.
பசியைப் பொறுத்துக் கொள்ளும்
நோன்பைக் கடைப்பிடிப்பதைவிடப்
பசித்திருக்கும் ஒருவருக்கு
உணவு அளிப்பதே சிறந்ததாகும்.
திருக்குறள்
இந்தத் திருக்குறள் நூலை லண்டனில் பெற
தமிழர் தகவல் இதழைத் தொடர்புக்கொள்ளுங்கள்
விலை. 2 பவுண்ட் மட்டும்

On Your Way

**Best Foods**


Est. 1989

SUPERMARKET

**11-13 Ealing Road Wembley**
**Middlesex HAO 4AA Tel : 0208 9000100**

**364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT**
**Tel : 020 8577 6002, Fax : 020 8570 2323**

**259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL**
**Tel : 020 8684 6269, Fax : 684 4677**



எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும்
அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று மலிவு விலை
பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை
சேமியுங்கள்


கவிஞர் அப்துல் ரகுமான் கவிஞர் இன்குலாப் கவிஞர் மு.மேத்தா கவிஞர் அறிவுமதி
கவிஞர் நை.மு.இக்பால் கவிஞர் பழநிபாரதி கவிஞர் யுகபாரதி கவிஞர் இசாக்
ஆகியோரின்
உயிரைப் பிழியும் வரிகளில்
தாஜ்நூர்
இசைக்கோர்ப்பில்
வழங்கும்
தமிழ்ப்பிள்ளை
தயாரிப்பு
அகமது யாசீன்
நெறியாள்கை
இசாக்
விரைவில்


Hotel Westeern
Hotel Westeern (Pvt) Ltd
35, Frankfurt Place
Bambalapitiya
Colombo 4, Sri Lanka
Email : infor@hotelwesteern .com
Web : www.hotelwesteern.com
Approved by the Ceylon Tourist Board
EELAM SHOP
399 Lewisham High Street
Lewisham
London SE13 6NZ
TeL : 020 8690 6545


செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
கோடைகால விடுமுறையை முன்னிட்டு புடவைகள் நகைகள்
அனைத்தும் நம்ப முடியாத விலைக்கழிவில்
£1000 மேல் புடவை கொள்வனவு செய்பவர்களுக்கு
£200 பெறுமதியான Gift Voucher
இலவசம்
£2000 மேல் நகைகள் கொள்வனவு செய்பவர்களுக்கு
£100 பெறுமதியான Gift Voucher
FREE
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள
சீட்டுத் திட்டத்தில் இணைந்து
நீங்களும் ஒரு அதிஸ்டசாலி
ஆகுங்கள்.
Selvaraja Gold House & Textile
Exclusive Designer Jewellery & Sarees
162b, Mitcham Road London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269


Athavan TV
24 Hour Tamil Channel
Drama | Movies | Music | News | Sports | Live Events | Religion | Life Style
Free Channel
Satellite: (Eurobird 9a)
Freq: 11843
Vertical Symbol Rate: 27500
FEC – ¾
நம்ம நட்சத்திரங்களின் அணிவகுப்பு
Monday to Friday 8.30 PM
ரிஷிமூலம்
Sunday 9.00 PM
மேளம் கொட்டு தாலி கட்டு
Saturday 8.00 PM
நாயன்மார்கள்
Monday to Friday 6.00 PM
உணர்வுகள் ஒரு முன்னோட்டம்
Monday to Friday 8.00 PM
மல்லி
Monday to Friday 6.30 PM
Latest Movies
Daily 2.00 PM
Juniors
Sunday 11.00 AM
லட்டு
ஆசையா
Monday to Friday 5.00 PM
NEWS UPDATE
BREAKING NEWS
News That's Making News!
8AM 1PM 7PM
விளம்பர தொடர்புகளுக்கு
UNITED KINGDOM 0203 318 2004
FRANCE 097 518 0123
ITALY 0247 921 666
GERMANY 0305 6837 0039
SWITZERLAND 0435 082 375
SWEDAN 085 250 0208
WWW.ATHAVAN.TV




இலண்டனில் தரமான தங்கத்திற்கு
PATHMINI
JEWELLERS
22ct GOLD
892 London Road
Thornton Heath
Surrey CR7 7PB
Tel : 020 8665 1111




லூசியத்தில் முதலாவது
தமிழ்க்கடை
கற்பகம்
தங்கள் சேவையை
விரிவாக்கியுள்ளார்கள்
KATPAGAM
36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 694 88 10
உடன் காய்கறிகள்
பழவகைகள், இறைச்சி,
தமிழ் ஆடியோ, வீடியோ
தமிழ்படங்கள் அனைத்தும்
ஒரே இடத்தில்




எவரஸ்ட்
24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
அசத்தலான
அசைவ சுவைக்கு
Breakfast Lunch Dinner

Anthoorium
World of Designs
Jewellery & Textiles
102, B Burlington Road
New Malden, Surrey KT3 4NT
Tel : 020 8942 8001 Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk Email : sales@anthoorium.co.uk


AYNGARAN INTERNATIONAL
PROUDLY PRESENTS
FOR FURTHER DETAILS
AYNGARAN VIDEO : 020 8543 7159
020 8543 4342, 020 8543 4477
ags
KALPATHI S. AGHORAM
PRESENTS
IRUMBU KUTHIRAI
DIRECTION : YUVARAJ BOSE MUSIC : G.V.PRAKASHKUMAR
STARRING : ATHARVAA, PRIYA ANAND, JOHNNY TRI NGUYEN, RAAI LAXMI, JOSHNA, JAGAN, MANOBALA, DEVADARSHINI, AKSHARA
FROM 29TH AUG - UK CINEWORLD CINEMAS
ILFORD, WANDSWORTH, FELTHAM, WEMBLEY
STAPLES CORNER, BIRMINGHAM, LIVERPOOL
LUTON, GLASGOW, SHEFFIELD
Advance Booking : http://www.cineworld.co.uk or Call - 0871 220 1000
FROM 29TH AUG - HARROW SAFARI - DAILY SHOWS
FRI 29TH AUG @ 8.00PM, SAT 30TH AUG @ 8.00PM
SUN 31ST AUG @ 5.00PM
Advance Booking - http://www.safaricinema.com/ or Call - 0208 426 03 03
FROM 29TH AUG - EASTHAM BOLEYN CINEMA
DAILY SHOWS - FROM 29TH AUGUST
2.00PM-5.00PM-8.00PM-(11.00PM FRI / SAT ONLY)
Advance Booking - Call - 020 8471 6147
FOR FURTHER DETAILS : 020 8543 4342, 020 8543 4477. SUBJECTED TO CHANGES IN SHOW TIMES WITHIN ADVERTISE PERIOD.
JOIN US ON
YouTube www.youtube.com/ayngaran
www.facebook.com/ayngaran
visit us: www.ayngaran.com

# Thinesh

**Jewellers & Textiles**

276, Lewisham High Street
Lewisham
London SE 13, 6JZ
Tel : 020 8613 9569
www.thinesh-jt.com



லூசியத்தில்
தரமான
நகைக்கடை

Book typing and layout
*(English and Tamil)*
Book & Wrapper Design
Brochure Design
and Printing
Contact
ambika.siva5@gmail.com

அழைப்பிதழ்கள், நூல்கள், இதழ்கள்
வடிவமைக்க...
சிறந்த முறையில்
அச்சிட.....
தொடர்பு கொள்ளுங்கள்
ambika.siva5@gmail.com

Ilford பகுதியில் புதிய பல்பொருள் அங்காடி

# SRI STORE

இது காலமும் SRI FOOD & WINE
என்ற பெயரில் இயங்கிய எமது கடை
புதிய பெயரில் தொடர்ந்து தங்கள் சேவைக்காக

**396-400 Ilford Lane**
**Town Centre Ilford, IG1 2NB**
**Tel : 020 8553 7737**



இந்த இடத்தில்
நீங்கள்
விளம்பரம் செய்ய
மாதம்
£ 30 மட்டுமே


90 years of silk heritage
RmKV
Wedding Silks
handcrafted
Silks of India
panagal park chennai
brooke bond rd coimbatore
vannarpettai tirunelveli
toll free no 1800 425 3105
(applicable within
India only from 10am to 9pm)
sms Bridal7 to 53636
email silks@rmkv.com
www.facebook.com/RmkvSilks
purchase online at www.rmkv.com
Now in
Bangaluru
Orion Mall
brigade gateway campus
Dr. Rajkumar rd
malleswaran-rajaji nagar
bengaluru


AYURVEDA
VAANI Foods
100% NATURAL
Amla Juice
Karela Juice
CONTAINS NO ARTIFICIAL COLOR & FLAVOUR
Gulab Sharbat
With Natural Rose Flavour
Aloe Vera Juice
CONTAINS NO ARTIFICIAL COLOR & FLAVOUR
Amla Squash
Enriched with Ginger
NEW IN STORES


Limited Offer
Lycamobile
Call the world for less
UNBEATABLE UK PLAN
Sri Lanka
3p /min
Landline + Mobile
Only! £15
Valid for 30 days
UNLIMITED
UK calls & texts
5GB 4G DATA
Text 11744 to 3535
Order your free SIM at
www.lycamobile.co.uk
or call 020 7132 0322
Top-up your SIM online or where you see the following signs:
TESCO Sainsbury's ASDA WHSmith Martin McColl
Lycamobile UK Plan 17 ("the offer") inclusive allowances are for calls from the Lycamobile UK to the standard UK landlines (starting 01,02 or 03) and other UK mobile numbers, standard UK Texts and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Mobile Internet allowance for the UK PLAN 17 includes 5GB. Allowances are valid for 30 days from the date of purchase. 4G data availability is subject to handset model and the location. Calls are rounded up to the nearest minute for the purpose of calculating remaining allowances. A customer may have only one offer on their account and may not buy another during the 30 days validity period. Any remaining allowance after 30 days will not be carried over into the next 30 day period should the customer repurchase their bundle. Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle. The offer is for non-commercial, private, personal use only. Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that offer is being used for commercial purposes, for conferencing, or if it is not being used in a handset (in a SIM box for example), if it is being used for tethering or if any reason Lycamobile reasonably suspects that you are not acting in accordance with this policy where we consider that the usage was illegitimate. Promotional period: The offer is valid from 24.09.2014 to 31.10.2014.
Lyca mobile